# தமிழரசு

16-8-1982 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆடி 31





திருச்சி-சமயபுரம் கோவில் அருகில் உள்ள சத்துணவுத் திட்ட மையத்தில் (28.7.82) மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் எந்தவித முன்அறிவிப்புமின்றி சோதனை நடத்திய காட்சி.

29.7.82 அன்று மதுரையில், இலவசச் சத்துணவுத் திட்டத்தைப் பாராட்டி அதற்காக நிதி ரூ 40 ஆயிரத்தை கொடுப்பதற்கான ஒப்புதல் கடிதத்தை, பழனி வட்டம் சத்திரப்பட்டி திரு கா. சுப்பண்ணா அவர்கள் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களிடம் கொடுத்தார். (திரு கா.சுப்பண்ணா அவர்களுக்கு அண்மையில் நடந்த இந்திய விமானப்படை நடத்திய லாட்டரியில் ரூ 50 இலட்சம் பரிசு விழுந்தது குறிப்பிடத்தக்கதாகும்) இவர் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர், ஆவார்.





மான்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர் அவர்களை 4.8.82 அன்று சென்னையில் தேசிய மாணவர் படை தலைமை இயக்குநர் திரு. மொரீந்தர் சிங் சந்தித்தார்.



# இந்நாள் திருநாள்

இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்-ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்தரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னாள்-தன்னரசு பெற்ற நாள்-உரிமைப் போரிலே வெற்றி கண்ட நாள் என்று பாராட்டுவர்; பாராட்டுகின்றனர்.

இந்நாள் நாட்டின் நிலையை நாம் அறிந்திடல் வேண்டும். சுதந்தரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திடவேண்டும். அப்போதுதான், எதற்காகச் சுதந்தரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்தரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே, இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்தரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தரவேண்டும், எவ்வளவு தரவேண்டும், என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்குத் தீர்த்த நாள்-ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள், புதுக் கணக்குப் போட்ட நாள். இன்றைய ஆகஸ்ட் பதினைந்து கணக்குப் பார்க்கும் நாள்-சுதந்தரம் பெற்ற பிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில் எந்த அளவுக்கு நமக்குச் சுக வாழ்வு பெற்றளித்தது எனக் கணக்குப் பார்க்கும் நாள்.

**பேரறிஞர் அண்ணா**

*[15.8.1967-ல் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து]*

# சூளுரை ஏற்போம்!

* ஒரு நாட்டின் வரலாற்றில் சுதந்தரதினம் என்பது பெருமிதத்துடன் குறிக்க வேண்டிய திருநாளாகும். இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில் எண்ணற்றோரின் தியாகங்களுக்குப் பிறகு விடுதலைக் கனியை நாம் பெற்று சுவைத்து, மகிழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

* மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போதுதான், அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்துவிடுகிறது. சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

அண்ணா அவர்களின் அணுகு முறையைத்தான் தமிழக அரசு கடைப்பிடித்துச் செயல்பட்டு வருகிறது. பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காண விரும்பிய சமத்துவச் சமுதாயத்தைக் காண்பதில் ஏற்படுகின்ற தடை எதுவானாலும் அதை அப்புறப்படுத்திச் செயல்படத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

காந்தியடிகளின் புத்திமதியைச் சுதந்திரத் தின நாளில் நினைவு படுத்துவது பயனுடையதாக இருக்குமென்று கருதுகிறேன்.

நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ள பெரி-



யோர்களின் கருத்தை மனத்தில் கொண்டு ஏற்றத்தாழ்வற்ற, சாதிபேதமற்ற சமுதாயத்தை நிறுவ நாம் அனைவரும் இந் நன்னாளில் சூளுரை மேற்கொள்வோமாக!

**மாண்புமிகு முதல்வர்**

*[15.8.79 அன்று தொலைக் காட்சியிலும் வானொலியிலும் ஆற்றிய உரையிலிருந்து]*


**தமிழரசு**

மலர்: 13 இதழ்: 4

16—8—1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆடி 31

# அன்னை வெற்றி கொள்கவே!

சிறந்து நின்ற சிந்தை யோடு
தேய நூறு வென்றிவள்
மறந்த விர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்த விர்க்கி லாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே!

நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறு நுண்மை கொள்ள விங்கு
தேடி வந்த நாளினும்,
மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்
ஈறு நிற்கு முண்மை யொன்றி
றைஞ்சி நிற்பள் வாழ்கவே!

வில்லர் வாழ்வு குன்றி யோய
வீர வாளு மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்
சொல்லு மிவ்வ னைத்தும் வேறு
சூழ நன்மை யுந்தர
வல்ல நூல்கெ டாது காப்பள்
வாழி யன்னை வாழியே!

தேவ ருண்ணு நன்ம ருந்து
சேர்ந்த கும்ப மென்னவும்
மேவு வார்க டற்க ணுள்ள
வெள்ள நீரை யொப்பவும்
பாவ நெஞ்சி னோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவி லாத செல்வ மின்னும்
ஓங்கு மன்னை வாழ்கவே!

இதந்த ருந்தொழில்கள் செய்தி
ரும்பு விக்கு நல்கினள்
பதந் தாற் குரிய வாய
பன்ம தங்கள் காட்டினள்
விதம் பெறும்ப னாட்டி னர்க்கு
வேறொ ருண்மை தோற்றவே
சுதந்த் ரத்தி லாசை யின்று
தோற்றி னாள்மன் வாழ்கவே!

மகாகவி பாரதியார்







# மின் உற்பத்தியில் தன்னிறைவு காண...


மாண்புமிகு மின்துறை அமைச்சர்

## திரு. எஸ். இராமச்சந்திரன்


"வருமுன்னர்க் காவா தான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்றார் வள்ளுவர். தீமை வருமுன் காக்கவில்லையெனில் தீப்பிடித்த வைக்கோற்போர் போல அழிவு ஏற்படும். பிடித்த தீயை அணைப்பதைவிட, தீப்பிடிக்காத வீடுகள் மேலல்லவா? அது போல, தேவை வருத்து முன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இது, மின்சக்தியில் மிகவும் பொருந்தும்.

புனல் மின் திட்டம்,
அனல் மின் திட்டம்,
அணு மின் திட்டம்.

எனும் மூன்று வகையில் மின் உற்பத்தி செய்யப்படுவது உலக நாடுகள் ஏற்றுள்ள முறை. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. இதர வகைத் திட்டங்கள் இருக்கின்றனவெனினும் அவைகள் பெரும்பாலும் ஆய்வு அடிப்படையிலேயே. ஆகவே, நம் தேவையை நிறைவேற்ற நாம் நம்ப வேண்டியவை மேற்கூறியவைகளே.

இந்தியக் கூட்டமைப்பில் மின் உற்பத்தி திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு, மத்திய மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பேயாகும். மின் உற்பத்தித் திட்டங்கள் செவ்வனே நிறைவேற, செயல்பட இரு அரசுகளும் கைகோத்துக் கொண்டு பணியாற்ற வேண்டும். இருப்பினும், பெரும் பங்கு மத்திய அரசினுடையதே.

சான்றாக, அணுமின் உற்பத்தித் திட்டங்களைத்தீட்டுவதும் நிறைவேற்றுவதும் இயக்குவதும் முழுக்கமுழுக்க மத்திய அரசின் கடமை.

அனல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதும் நிலக்கரியை ஒதுக்குவதும், தருவதும், புகை வண்டிகள் மூலம் கொண்டு வருவதும், துறைமுகங்களில் ஏற்றி இறக்கி கடல்வழி கப்பல் மூலமாகக் கொண்டு வருவதும், அனல்மின் நிலைய இயந்திரங்களைத் தருவதும், அளவைக் கருவிகளை உற்பத்தி செய்வதும் ஆகிய பல்வகைக் கடமைகளையும் தனது பல்வேறு துறைகள் மூலமும் பொது நிறுவனங்கள் மூலமும் தொடர்ந்து அளித்து, உதவிடும் கடமை, மத்திய அரசினுடையதே!

புனல் மின் திட்டங்களை அனுமதிப்பதும் உற்பத்தி இயந்திரங்களை வெளி நாடுகளிலிருந்து கொண்டு வர ஏற்பாடு செய்வதும் மத்திய அரசே. மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டுவதும், நிதி ஒதுக்குவதும், குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுவதும் மாநில அரசுகளின் கடமையாகும்.

ஆகவே, மாநிலங்கள் மின் உற்பத்தியில் தன்னிறைவை எய்தினால் அப் பெருமையில் மத்திய அரசுக்கும் பங்குண்டு. பற்றாக்குறை

இருப்பின், இருஅரசுகளுக்குமே பொறுப்புண்டு.

மாநில அரசுகளே பெரும்பாலும்பொறுப்பேற்று நிறைவேற்றும் புனல் மின் திட்டங்களைப் பொறுத்த வரை, தமிழகம் ஏற்கனவே செய்து முடித்தவை பல. அவற்றின் மூலம் 1359 மெகாவாட் உற்பத்தித் திறன் எய்தியுள்ளது. நிறைவேற்றப்படவேண்டியவை இன்னுஞ் சிலவே. சேர்வலாறு நீர் மின் திட்டம், கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம், குந்தா ஐந்தாவது கூடுதல்பிரிவு நீர் மின் திட்டம்என 160 மெகா-வாட் தரும் மூன்று திட்டங்கள் செயல் முறையில் உள்ளன. மின் உச்ச தேவையைச் சரிகட்ட 400 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட காடம்பாறை நீரேற்று மின் திட்டமும் செயல் முறையில் உள்ளது. இவை தவிர, கேரள மாநிலத்துடன் பேசி முடிக்கப்பெற வேண்டிய 150 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பாண்டியாறு - புன்னம்பழா 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட திட்டம் சோழத்திப்புழா திட்டம், கர்நாடக மாநிலத் துடன் கலந்து முடிவெடுக்கப்பட வேண்டிய 800 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒகனேக்கல் திட்டம் ஆகியவை எதிர்காலத் திட்டங்கள். மாநிலங்களுக்கிடையே ஆன நதி நீர்ப் பங்கீடுகள் குறித்த தீர்வை இவை எதிர் நோக்கியுள்ளன. சிறு சிறு புனல் மின் திட்டங்களை நிறைய உருவாக்கவேண்டுமென்ற முயற்சியில் 196 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பலத்திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, புனல் மின் திட்டத்திற்கான வாய்ப்புகளை தமிழகம் முழுவதும் பயன்படுத்தி வருகிறது.

இந் நிலையில், மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நிறைவேற்றி , இயக்க வேண்டிய அளவில் மின் அனல் திட்டங்களை நாம் பெரிதும் சார்ந்துள்ளோம். 1970-75ல் முதன் முதலில் நிறைவேற்றப்பட்ட 450 மெகாவாட் எண்ணூர் அனல் மின் நிலையம் நொண்டிக் குழந்தையாகவே இருந்து வருகிறது. அடிப்படைக் கோளாறுகளை இது கொண்டுள்ளதால், எதிர்பார்த்த அளவு மின் உற்பத்தி கிட்டவில்லை. இருப்பினும், இவ்வரசு பொறுப்பேற்றவுடன், மைய அரசுடனும், அதன் நிறுவனங்களுடனும் செக்கோஸ்லோவாக்கியாவின் வெளிநாட்டு நிபுணர்களுடனும் கலந்தாலோசித்து சுமார் 35 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டுத் திட்டத்தை தீட்டி, செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக, சுமார் 60 கோடி யூனிட்டுகள் அடுத்த ஆண்டு முதல் கூடுதலாக கிடைக்கும்.

630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றிய பெருமை இவ்வரசுக்கு உண்டு. இன்று தமிழகத்தின் மின் தேவையை தோள் கொடுத்துத் தாங்குவது தூத்துக்குடி அனல் மின் திட்டமே. இதற்குத் தேவைப்படும் நிலக்கரியை தொடர்ந்து தரவும், கருவிகளும் இயந்திரங்களும் பழுதுற்றால் காலத்தே சரிசெய்யும் உதவ இந்திய அரசு தனது நிறுவனங்கள் மூலம் ஒத்துழைத்திட வேண்டுகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடெங்கும் சுமார் 20 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி கூடுதலாகும் நேரத்தில் வெறும் 230 மெகாவாட் மட்டுமே கூடுதல் திறன் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனும் நிலையை மத்திய அரசுக்கு நான் சுட்டிக் காட்டிய நேரத்தில், மேலும் அனல் மின் உற்பத்தி திட்டங்களை அனுப்புமாறு மத்திய மின்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதற்கொப்ப, மத்திய அரசின் ஆலோசனையின் பேரில், மேட்டூரில் தற்பொழுது நிறைவேற்றி வரும் 420 மெகாவாட் அல்லாமல், கூடுதலாக 420 மெகாவாட் திறன் கொண்ட திட்டமும், தூத்துக்குடியில் கூடுதலாக 710 மெகாவாட் திறன் கொண்ட திட்டமும், வட சென்னையில் 1050 மெகாவாட் திறன் கொண்ட திட்டமும் மத்திய அரசின் அனுமதிக்காக 1981 டிசம்பரில் அனுப்பப்பட்டன. இதில் மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இதர இரண்டு திட்டங்களும் மத்திய அரசின் பல்வேறான பரிசீலனையில் உள்ளன. விரைவில் அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். இவற்றின் மூலம் 2600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் திட்டங்கள் வருகிற ஐந்தாண்டுகளில் உருவாகும்.

அணு மின் துறையில் 470 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கல்பாக்கம் அணு மின் நிலையம் இந்திய அரசின் செயல்முறையில் உள்ளது. இவ்வாண்டு இத் திட்டத்தில் 235 மெகாவாட் திறன் கொண்ட ஒரு இயந்திரம் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதை விரைவில் முடிக்க இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தென்னக மாநிலங்களில் மிகவும் பற்றாக்குறை உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். மின்வெட்டு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொடர்கதையாகவே உள்ளது. கடந்த ஆண்டு மின் உச்சத் தேவையில் மின் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், 2100 மெகாவாட்டை எட்டியது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தால், 2400மெகாவாட்டை எட்டியிருக்கும். 633 மெகாவாட் கொண்ட நீர் மின் உற்பத்தித் திறன் கோடைக் காலத்தில் கிடைப்பதில்லை. ஆகவே, இவ்வுச்சத் தேவையை வருங்காலத்தில் சமாளிப்பதென்றால், இப்போதுள்ள மின் உற்பத்தித் திறனை இன்னும் ஐந்து ஆண்டுகளில் இரு மடங்கு ஆக்குவதன் மூலமே இயலும்.

பல இலட்சம் டன் நிலக்கரியை பல்லாயிரம் மைல்களுக்கு ஏற்றிச் சென்று, அனல் மின் திட்டங்களைநிறுவுவதைவிட, தமிழகம் போன்ற மாநிலத்தில் அணு மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவுவதே காலப் பொருத்தம். இதைக் கருதியே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தமிழகத்தில் ஆயிரம் மெகாவாட் உற்பத்தித்திறன்

---

முழு அளவை எட்டியுள்ள கேரளா, அரியானாவுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாடுதான் ஊரக மின்மயமாக்கத்தில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழ் நாட்டில்தான், நாட்டிலேயே இதுவரை அதிக அளவு எண்ணிக்கையிலான 9.5 இலட்சம் விசையேற்றங்கள் மின் இணைப்புப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டில் மின்விநியோகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 2.6 இலட்சம் கி.மீ. அளவுள்ள தாழ்வழுத்தக் கம்பித் தொடர்கள் நாட்டிலேயே மிக நீளமானதாகும்.

---

கொண்ட இரண்டு அணு மின் நிலையங்கள் வேண்டுமென்பதை அண்மையில் தூத்துக்குடியில் நடந்த நிகழ்ச்சியில் வற்புறுத்தியுள்ளார்கள். இந்திய அரசு அணு மின் திட்டங்களை நிறுவும் பொழுது இதைக் கருத்திற்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின் உற்பத்தித் திட்டங்களில் பெரும் பங்கை வகிக்க வேண்டியது மாநில அரசுகள் தான் என்றாலும், அண்மைக் காலமாக மத்திய அரசு பெருமளவுக்கு மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தேசிய நீர் மின் உற்பத்தி நிறுவனத்தின் மூலம் புனல் மின் உற்பத்தித்திட்டங்களையும் தேசிய அனல் மின் நிறுவனத்தின் மூலம் அனல் மின் உற்பத்தித் திட்டங்களையும், நாடெங்கும் நிறைவேற்றி வருகிறது. இந்திய அரசே மேற்கொள்ளும் புனல் மின் உற்பத்தித் திட்டம் எதுவும் தென்னகத்தில் இல்லை. ஆகவே, ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு முன்வந்துள்ளது. தமிழகம் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், கர்நாடகம் ஏற்கவில்லை. நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் பிடிக்கும். அதற்குள் காவிரிப் பிரச்சினையில் தீர்வு ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. ஆகவே, 800 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இத் திட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றிட கர்நாடகம் ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசு தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்தின் மூலம் அனல் மின் உற்பத்தித் திட்டங்களை நிலக்கரிச் சுரங்கங்களிலேயே அமைத்து வருகின்றது. சுரங்கத்திலிருந்து பற்றாக்குறை மாநிலங்கள் நிலக்கரியை வெகு தூரத்திற்குக் கொண்டுபோய் அனல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதை விட, சுரங்கத்துக்கு அருகேயே மின் உற்பத்தியைச் செய்து, அத்தகைய பற்றாக்குறை மாநிலங்களுக்குத் தரலாம் என்பதுதான் இதனுடைய நோக்கம். இம் முறை வரவேற்கத் தக்கது. எனினும், உற்பத்தித் திறனைப் பங்கீடு செய்வதில் அவ்வட்டாரத்திலுள்ள மாநிலங்களின் பற்றாக்குறையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வேறொரு விசித்திரமான முறையை 1978-ல் மத்திய அரசு உருவாக்கியுள்ளது. மாநிலங்களுக்கு மத்திய அரசு தரும் திட்ட உதவி அடிப்படையிலும், மாநிலங்கள் கடந்த காலத்தில் பயன்படுத்திய மின் அளவையும் வைத்து மின்சாரம் பங்கீடு செய்யப்படுகிறது. இதன்படி, தமிழகத்தை எடுத்துக் கொண்டால் 1969ல் உருவாக்கப்பட்ட மத்திய திட்ட நிதி உதவி முறையிலும் பாதிக்கப்பட்டது. 1971 முதல் 76ஆம் ஆண்டு வரை கடும் மின் பற்றாக்குறையாலும் அவதிப்பட்டது. ஆகவே, இரண்டையும் கணக்கில் கொள்ளும்போது, பற்றாக்குறை தீர்வதற்குப் பதிலாக, தமிழகத்தின் பற்றாக்குறை அதிகரிக்கிறது. அதே நேரத்தில், உபரி மாநிலங்கள், மத்திய அரசு தரும் மின்சாரத்தையும் பெற்று மேலும் உபரி மாநிலங்கள் ஆகின்றன. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க, மத்திய அரசு, உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அப்பகுதி மாநிலங்களுக்கிடையே நிலவும் பற்றாக்குறையைக் கணக்கிற்கொண்டு பங்கீடு செய்வதே சாலப் பொருந்தும். இக்கருத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் வற்புறுத்தி இந்தியப் பிரதமருக்கு ஏற்கெனவே கடிதம் எழுதியுள்ளார். இது குறித்துப் பிரதமரை நேரில் சந்தித்துப் பேசுவதாகவும் உள்ளார்.

**தமிழ் நாட்டிலுள்ள 25,526 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு எல்லாமே 1979 ஆம் ஆண்டு மார்ச் இறுதி வாக்கில் மின் வசதி அளிக்கப்பட்டு விட்டன. புதிதாகத் தோன்றியுள்ள 341 குடியிருப்புகளுக்கும்கூட 1982-ஆம் ஆண்டு ஏப்ரல் வாக்கில் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது.**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு மத்திய அரசின் நிறுவனமென்றும் ஆகவே இதில் உற்பத்தி ஆகும் மின்சாரமும் எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டியதுதான் நியாயமானது என்றும், இதில் உற்பத்தி ஆகும் மின்சாரம் முழுவதையும் தமிழகமே கேட்பது குறுகிய மனோபாவம் என்றும் விவரம் தெரிந்தவர்கள் கூட எழுதுவதும் பேசுவதும் வாடிக்கையாக உள்ளது. இவை பற்றிய சில உண்மைகளை உணர்வார்களேயாயின், இத்தகைய கருத்துக்கு இடமிராது. பற்றாக்குறையைப் போக்க தமிழகம் அனல் மின் திட்டங்கள் தீட்டியபோதெல்லாம் நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டின் முழு உற்பத்தியையும் தமிழகத்தின் கணக்கில் கொண்டே, மத்திய அரசு திட்டங்களை அனுமதித்தது. இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு, உற்பத்தி ஆகும் மின்சாரம் முழுவதையும் தமிழகமே வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற உறுதியையும் மத்திய அரசு பெற்றது. கல்பாக்கத்தின் உற்பத்தி, நெய்வேலி அனல் மின் உற்பத்து முழுவதும் தமிழகத்திற்கெனும் அடிப்படையிலேயே, ரூ 126 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வரும் காடம்பாறை நீரேற்று மின் திட்டம் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி மின் உற்பத்தி முழுவதும் தமிழகத்திற்கில்லையென்றால் இத்திட்டம் வீண் செலவாகிவிடும். 1971-ல் நாடாளுமன்றத்தில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களும் 'நெய்வேலி' மின்சாரம் முழுதும் தமிழகத்துற்குக் கிடைக்குமென அறிவித்துள்ளார். நெய்வேலியின் மூலம் மேலும் 630 மெகாவாட் கிடைக்குமென்று 10 ஆண்டுகளுக்கு மேலாக நம்பி இருந்துவிட்டு, இப்பொழுது 176 மெகாவாட்தான் கிடைக்கும் என்றால், இடருறுவது தமிழகம்தான். இதை முன்பே தெரிவித்திருந்தால் கூட, தமிழகம் வேறு திட்டங்களை இதற்குள் நிறைவேற்றியிருக்க முடியும். 1978-ல் முற்றிலும் வேறான அடிப்படையில் இயங்கும் தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்தின் பங்கீட்டு முறையை நெய்வேலிக்கும் கொண்டு வருவது பொருந்தாது. பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் கடித மூலம் ஏற்கனவே எழுதியதோடல்லாமல், விரைவில் நேரில் சந்தித்து விளக்குவதாகவும் திட்டமிட்டுள்ளார்.

ஒவ்வொரு மாநிலமும் மின் உற்பத்தியில் தன்னிறைவை எய்துவதன் மூலமே இந்தியா தன்னிறைவை எய்த முடியும். கடும் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கும் தமிழகத்திற்கு மேற்கூறிய வகைகளால் இந்திய அரசும் தமிழக அரசும் இணைந்து செயல்பட்டால், மின் பற்றாக்குறை எனும் சொல் இன்னும் ஐந்தாண்டுகளில் தமிழகத்தின் அகராதியில் இருக்காது.

**(1.8.82ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை)**



# என் பயணம்

# கல்விப்பயணமே!

சீனாவிற்குச் சென்று வந்தவர்களைப் பார்த்து அவர்களுடைய அனுபவத்தை அறிய விரும்புவது எல்லோரிடத்திலும் இயல்பாக இருக்கின்ற ஒரு ஆர்வம். அதுபோலவே தாம் பார்த்ததை எல்லோரிடமும் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் போய் வந்தவர்களுக்கும் அதிகம் இருக்கும். அதனை வெளியிட இது எனக்கு நல்லதொரு வாய்ப்பு.

### மக்களுக்கு எடுத்துச் சொல்ல

நான் ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய பல இடங்களுக்குச் சென்று வந்தேன். இந்தப் பயணத்திற்குக் காரணம் சீனா விடுத்த அழைப்புத்தான். புரட்சித் தலைவரின் அனுமதியைப் பெற்று, பிறகு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று மற்ற நாடுகளையும் பார்த்து வரலாம் என்ற ஆர்வத்தில்தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்.

சைனா ஒரு கம்யூனிஸ்ட் நாடு. ஜப்பான் ஒரு ஜனநாயக நாடு. தாய்லாந்து ஒரு குடியரசு நாடுதான். ஆனால் அரசர் இருக்கிறார். சிங்கப்பூர் ஒரு நகரவை நாடாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தியா இன்று சுமார் 68 கோடி மக்கள் கொண்ட ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்குகிறது சீனாவின் அழைப்பை ஏற்று இப்பெரிய நாட்டிலிருந்து சீனாவிற்கும் பிற நாடுகளுக்கும் நான் சென்று வந்தேன். பல்வேறு அரசியல் அமைப்புகள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு நான் அங்கு செல்லவில்லை. கல்வி அமைச்சர் என்ற முறையில் கல்வித் துறையில் உள்ள ஆர்வத்தின் காரணமாக, அங்குள்ள கல்வி நிலையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அவற்றைப் பற்றி மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என்ற நோக்கத்துடனும்தான் நான் சென்றேன். அதைப்போலவே ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற நமக்குத தெரியாத சில சிறப்பான, அதே நேரத்தில் மோசமான நிகழ்ச்சிகளையும் தெரிந்து வர முடியும்.

நான் சென்ற இடங்களிலெல்லாம் நான் கேட்ட இடத்திற்கெல்லாம் அழைத்துச் சென்றார்கள். கம்யூனுக்குப் போக வேண்டும் என்று சொன்னோம். அங்கே அழைத்துச் சென்றார்கள். அவர்களிடத்தில் சில கேள்விகளைக் கேட்க வேண்டும் என்றுசொன்னோம். அதற்கும் அனுமதித்தார்கள். அவர்களிடத்திலே அங்கே இருந்த நிலைமைகளைப் பற்றி எல்லாம் கேட்டோம். பல்வேறு இடங்களுக்கும் போய் வர உரிமை வாய்ப்புக்களையும் சொடுத்தார்கள். அந்த நாடுகளிலே சாணக் கூடிய குறைபாடுகளை எல்லாம் தெரிந்து கொண்டு வந்து உங்களிடத்திலே கூறவேண்

டும் என்ற நோக்கமல்ல. 100க்கு 60 பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஒரு நாட்டில் மக்களுக்காக என்னென்ன காரியங்களை நாம் செய்ய வேண்டும், அந்நாட்டு மக்களின் அனுபவங்கள் எந்த வகையிலே நமக்குப் பயன்படும் என்பதைத் தெரிந்து கொள்ள நான் சென்றேனே தவிர, அவர்கள் எந்த நோக்கத்தில் என்னை அழைத்திருந்தாலும் அல்லது எந்த நோக்கத்தில் என்னை இங்கிருந்து அனுப்பியிருந்தாலும் நான் சென்று பார்த்ததும், அறிந்ததும் எல்லாம் இந்த ஒரு பெரிய வளையத்திற்குள்தான்.

**வளர்ந்து வரும் தென் கொரியா**

நான் பல்வேறு இடங்களுக்குச் சென்றேன், குறிப்பாக, தென்கொரியாவைப் பற்றிக் கூற வேண்டும் என்றால், 1971-ஆம் ஆண்டு வரையில் வடகொரியா, தென் கொரியா என்ற சண்டையில் தங்களுடைய முழு முயற்சியையும், நேரத்தையும் உழைப்பையும் செலவு செய்து, பெரிய ஏழ்மையிலே போராடிக் கொண்டிருந்த நாடு இது. ஆனால் இன்று, 1982-ஆம் ஆண்டிலே நமக்கு சிமெண்ட் போதவில்லை என்றதும் அதை நமக்காக இறக்குமதி செய்கின்ற நாடு தென்கொரியா தான். இந்திய சர்க்கார் கப்பல் வாங்க வேண்டும் என்று நினைத்தவுடன், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை சுமார் 68 கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய பாரத நாடு-1979 வரை வட கொரியாவுடன் போராடிப் போராடி, பல்வேறு இன்னல்

மாண்புமிகு கல்வி அமைச்சர்

## திரு. செ. அரங்கநாயகம்

களுக்கு ஆளாகி பின் நிமிர்ந்து வளர்ந்துவரும் தென்கொரியாவிடம் கப்பலுக்காக ஆர்டர் கேட்டிருக்கிறது. நான் அறிந்த வரையில் கப்பல்துறையில் மிகப் பெரிய நாடு ஜப்பான் நாடாகும். நாங்கள் சென்றபோது இத்துறையிலே முதலிடம் வகிப்பது தென்கொரியா எனச் சொன்னார்கள். ஆகவே, நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவதெல்லாம் 1971 வரை நம்மைவிட மோசமான நிலையிலே இருந்த தென்கொரியா நாடு 1982-இல்



ஜப்பானையும் மீறி எப்படி முன்னேற முடிந்தது என்பதுதான்.

சிங்கப்பூர் வந்தபோது அங்கு 80 மாடிக் கட்டடம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்ததைக் கண்டேன். 'எ சிட்டி இன் எ சிட்டி' (A City in a City) என்று வியக்கிறார்கள். இந்தக் கட்டடத்தைக் கட்டுகிற காண்டிராக்டை யார் எடுத்திருக்கிறார்கள் என்று கேட்டபோது தென்கொரியா என்று சொன்னார்கள். சிங்கப்பூரில் நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஐந்து லட்சம்பேர் இருக்கிறார்கள். அண்ணா யூனிவர்சிடி இருக்கிறது. இன்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது. இவ்வளவு தொழிலாளர்களும் இருக்கும் நம்மால் எடுக்க முடியாத ஒரு காண்ட்ராக்டை, நமக்குப் பக்கத்திலே வந்து, தென்கொரியாவிலிருந்து வந்து எடுத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பாங்காக்கில் யுனெஸ்கோ அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். சோல் என்று உச்சரிக்கப்படும் சியோல் என்ற நகரம் தான் கொரியாவின் தலைநகரம். யுனெஸ்கோ சார்பில் ஒரு 'ப்ராஜெக்டை' ஜப்பானில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு 'குளோபல் டெண்டர்' கேட்டிருந்தார்கள். அதற்கு ஜப்பானும், தென்கொரியாவும், மற்ற நாட்டினரும் டெண்டர் கொடுத்திருந்தார்கள். ஜப்பான் நாடு தங்களுக்குத்தான் கிடைக்கும் என்றிருந்தார்கள். ஆனால் அது தென்கொரியாவிற்குத்தான் போயிற்று. ஆகவே ஜப்பானிலே தென்கொரியாவைச் சேர்ந்தவர்கள் தான் கட்டடம் கட்டுகிறார்கள். 40 மாடிக் கட்டடம் கட்டுவதென்பது அவர்களுக்கு ஒரு மிகச் சுலபமான காரியம். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் அதைக் கட்டி விடுகிறார்கள். பூமிக்கு அடியிலே 'சப்வே' போடுவதும் அவர்களுக்கு மிகச் சாதாரணமான காரியம். இதுபோன்ற தொழில்களில் அவர்கள் மிகப் பெரியவர்களாக இருக்கிறார்கள். அப்படி ஒரு நாடு வளர்ந்து கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய தனி நபர் வருமானம் உயர்ந்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கின்ற அத்தனைப் பேருக்கும் வேலைவாய்ப்பு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இன்றைக்கு உலகம் பூராவிலும் ஒரு பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கின்றது. வீடுகள், கட்டடங்களுடைய விலை இறங்கிக் கொண்டு இருக்கிறது.

சென்ற இடத்தில் ஒரு சட்டை வாங்க வேண்டும் என்று வாங்கினால் அதிலே 'மேட் இன் சோல்' அல்லது 'மேட் இன் சௌத் கொரியா' என்று போட்டிருக்கும். ஹாங்காங், தாய்லாந்திற்கு இத்துணிகளை விற்கிறார்கள். தாய்லாந்தில் இந்தத் துணிதான் விற்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு வகையான முன்னேற்றத்தை-எல்லோரும் பார்த்து வியக்கத்தக்க அளவில் ஒருநாடு பெற்று வருகிறது. அதை நான் எப்படிப் பார்க்காமல் இருப்பது! அதனால் சைனாவின் அழைப்பை ஏற்று அந்த நாட்டிற்குப் போய் வர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அங்கு நான் சென்று வந்தேன்.

சியோல் நகரத்திலிருந்து நேராக பீகிங்கிற்கு விமானம் கிடையாது. தென் கொரியாவிற்கும் வடகொரியா என்ற கம்யூனிஸ்ட் நாட்டிற்கும் விரோதம் இருந்து கொண்டிருந்த காரணத்தால், தென்கொரியாவிற்கும் சைனாவிற்கும் அரசியல் ரீதியான உறவு எதுவும்



கிடையாது. ஆகையால் விமானம் அங்கிருந்து போவதில்லை. சோலில் இருந்து பீகிங் போக வேண்டும் என்றால் டோக்கியோ போய்த்தான் போக வேண்டும். இந்த முறையில் டோக்கியோ போவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அந்நாட்டு மக்களைக் கண்டு வியந்து போனேன்.

### ஜப்பானியரின் கடின உழைப்பு

ஜப்பானின் வளர்ச்சி மேலை நாடுகளைப் பிரமிக்க வைக்கும் அளவுக்கு அமைந்து இருப்பதை எல்லோரும் அறிவார்கள். உலகம் பூராவும் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிறது. கட்டடங்கள் விலை இறங்கிக் கொண்டிருக்றது என்று கூறினேன். ஹாங்காங் போயிருந்த போது பம்பாயைச் சேர்ந்த சிலர் கட்டடங்களை வாங்கியிருந்தார்கள். 10 மாடி 20 மாடிக் கட்டடங்கள, விலையைக் கேட்டால் 5 கோடி, 10 கோம என்று சொன்னார்கள். விலை இறங்கிக் கொண்டிருக்கின்றது. அதனால் தான் கட்டடம் வாங்குகிறோம் என்னும் கூறினார்கள். சில நாட்களுக்கு முன்னதாக 'இந்தியா டுடே' என்ற டத்திரிகையைப் பார்த்தபோது பம்பாயில் கட்டடங்கள் விலை வீழ்ச்சியடைந்திருக்கிறது என்று ஒரு 'கிராபிக்' போட்டிருந்தார்கள். பிரிட்டனில் தொழிற்சாலைகளை வாடகைக்கு விடுகிறோம் என்று விளம்பரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அமெரிக்கா பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக மிகப் பெரியகட்டடங்களை அழிக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் நான் கண்ட கீழை நாடுகளில், நான்கைந்து நாடுகளிலும் அந்தப் பொருளாதார மந்தம் அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. அவர்கள் வேகமாகவளராவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் கடின உழைப்பு, அவர்களுக்குள்ளே இருக்கின்ற சீரான உறவு முறை இவற்றின் காரணமாக அவர்களுடைய வருமானம் வளர்ந்து கொண்டே இருக்கிறது என்று பத்திரிகையிலும் போட்டிருக்கிறார்கள். ஜப்பானிலே இருக்கின்ற கம்பெனிகள் தொடர்ந்து லாபத்தை ஈட்டி வருவதைப் பார்த்து ஜப்பான் நாட்டு நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அங்கு நிறையபேர் வருகிறார்கள். 'ஜப்பான் ஸ்டைல் ஆப் மேனேஜ்மென்ட்' என்று பல புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எம்.பி.ஏ. கோர்ஸில் படிப்பவர் பலரும் மேலைநாட்டு முறையைப் பற்றித்தான் படிக்கிறார்கள். ஆனால் மேலை நாட்டு முறை தோற்றுவிட்டது. ஜப்பான் நாட்டு நிர்வாக முறை வென்று விட்டது என்று சொல்லிக் கொள்கின்ற இந்த நாட்டுக்குத்தான் மேலை நாடுகளிலிருந்துபலர் வருகிறார்கள். ஆராய்ச்சியும் செய்கின்றனர். இதில் மகிழ்ச்சிக்குரிய செய்தி நம் 'பாரதிதாசன்' யுனிவர்சிட்டி எம்.பி.ஏ, 'ஜப்பான் ஸ்டைல் ஆப் மேனேஜ்மென்ட்' என்ற முறையை ஒட்டி கோர்ஸ் அமைத்திருப்பதே யாகும். இது இந்தியாவிலும் நாம் உணர்ந்து விழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

### போராட்டம் உண்டு; ஆனால் உற்பத்தி குறையாது

ஜப்பானில் அவர்கள் எப்படி முன்னேறுகிறார்கள் தெரியுமா? பம்பாயில் ஏழு மாத காலமாக வேலை நிறுத்தம். அத்தனைக் கஷ்டங்களிலும் தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்புகிறார்கள். அது நியாயாமான கோரிக்கையாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு வேலை நிறுத்தம் நடக்கும்போதும் பேச்சு வார்த்தை நடத்தி அந்தக் கோரிக்கை வெற்றி பெற வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தொழில் ஸ்தாபனத்திற்கு இடைஞ்சல் வரக்கூடாது. தொழிலே சிதைந்து விட்டால், போராட்டத்திற்கு வேலையும் இருக்காது. போராட்டம் தொழிலைச் சாகடிக்கக் கூடிய நிலை வந்து விடக் கூடாது. 7 மாத காலம் போராட்டம் நடக்கிறது; நமக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அங்கு போராட்டம் எல்லாம் நடந்தாலும்கூட, உற்பத்தி குறையக்கூடிய காரியங்களில் அவர்கள் ஈடுபடுவதில்லை. எல்லா சக்திகளும் நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக பயன்படுகின்றனவே தவிர, அதன் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் வகையிலே கிடையாது. முயற்சியும், உழைப்பும், நேரமும் பாழ்படுவதில்லை என்பதைத்தான் பார்க்கிறோம். நாட்டினுடைய பெருமையும் எல்லோருடைய உழைப்பும் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுகின்றன.

சைனாவில் நாம் சொல்வதைப் போல ஒரு பெரிய இரும்புத்திரை போட்டு யாரும் எதையும் பார்க்கமுடியாத அளவுக்கு ஒரு நிலையில் அவர்கள் வைத்திருக்கவில்லை. ஓரளவிற்கு அவர்கள் முன்னால் இருந்த சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்கிறார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)



## சரித்திரத்தில் இடம் பெற்ற முதல்வர்

சீத்துணவா என்னவெனக் குழந்தை கேட்க
தாய்கண்ணில் நீர்பெருக்கும் துயரம் நீக்கி

எத்திசையும் போற்றுவண்ணம் அண்ணா கண்ட
இதயக்கனி ஏழையரின் இதயத் தையே

குத்தகையாய்ப் பெற்றிட்ட தலைவர் வாரிக்
கொடுத்தேகை சிவந்தவள்ளல் பிள்ளை கட்கு

சத்துணவுத் திட்டத்தை வழங்கி என்றும்
சரித்திரத்தில் இடம்பெற்ற முதல்வர் வாழ்க!

புதுகை மதிநண்பன்





## சத்துணவால் வரும் புத்துணர்வு

சீத்துணவுத் திட்டம் ஆம்ஆம்
சமுதாய மாற்றம் காண!

புத்துணர்வு புதிய மார்க்கம்
புதுப்பார்வை இளமைக் கல்வி

அத்துணையும் அமையப் பெற்ற
அரும்புகளின் ராஜ பாதை

வித்துக்கள் மரங்கள் ஆகும்
வியப்புக்குறி ஒன்றே தோன்றும்.

—தமிழ்த்தாசன்



கம்பன் அடிப்பொடி திரு சா. கணேசன் அவர்கள் 28.7.82 அன்று கோவையில் இயற்கை எய்தினார். அவரது உடல் 29.7.82 அன்று காரைக்குடியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மாண்புமிகு செய்தி- அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அரசு சார்பில் இறுதி மரியாதை செலுத்தினார்.

29.7.'82 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களை, இராஜஸ்தான் மாநில மாண்புமிகு துணை கல்வி அமைச்சர் திரு பி. டி. கல்லா அவர்கள் சந்தித்தார்.



சென்னை தண்டையார்ப்பேட்டைப் பகுதியில் தீவிபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும் குடிசைமாற்று வாரியத் தலைவர் திருமதி. சுலோசனா சம்பத் அவர்களும் 3.8.82 அன்று நிதிஉதவி, அரிசி, துணிகள் ஆகியவற்றை வழங்கினார்கள்.







சென்னை மாநகராட்சி நடத்தும் ஆஞ்சநேயநகர் தெலுங்கு உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு பூ. குழந்தைவேலு அவர்கள் 30.7.82 அன்று திறந்து வைத்தார்.

# படமும் செய்தியும்

'ஹஜ் கையேடு' என்ற நூலினை 31.7.82 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. ராசா முகமது அவர்கள் வெளியிட்டார்.



மத்திய அரசு தகவல் ஒலிபரப்பு அமைச்சகச் செயலாளர் திரு எஸ். பி. லால் அவர்கள் 29.7.82 அன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு கா. திரவியம் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.








## தூத்துக்குடி அனல் மின் நிலையம்

# வளர்ச்சிக்கு ஒரு சின்னம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களில் மிகப் பெரியது தூத்துக்குடி அனல் மின் திட்டமாகும். ரூ. 267 கோடிக்கு அதிகமான செலவில் உருவாகியுள்ள இந்த அனல் மின் நிலையம், 630 மெ.வா. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனுடையதாகும்.

சென்னைக்குத் தெற்கே 600 கி.மீ. தொலைவில் கடலோரப் பகுதியில், அமைந்துள்ள தூத்துக்குடி அனல்மின் நிலையம், தொழில்நுட்ப அமைப்பில், அண்மைக்கால நவீன கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப, சிலவற்றைக் கொண்டுள்ளது.

1976ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் களப்பணிகள் துவக்கப்பட்டு, இதன் 210 மெ.வா. திறனுடைய மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் முறையே 1979ஆம் ஆண்டு ஜூலையிலும், 1981-ஆம் ஆண்டு ஜனவரியிலும், 1982ஆம் ஆண்டு ஏப்ரலிலும் இயக்கி வைக்கப் பெற்றன.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது கட்ட நிறைவுவிழா (29.7.82) திருவள்ளுவர் ஆண்டு 2013 ஆடித்திங்கள் 13ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில், இந்திய அரசுத் திட்டக்குழு உறுப்பினர் திரு முகமது ஃபசல் அவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது இயந்திரத்தை இயக்கி வைத்தார்கள்.

விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரையும் மின்வாரியத் தலைவர் திரு பெ. முராரி ஐ.ஏ.எஸ். வரவேற்றார்.

அடுத்து, வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தூத்துக்குடியின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது தூத்துக்குடிஅனல் மின்நிலையம். உடலுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ அது




மாமூலன்



போன்று நாட்டு வளர்ச்சிக்கு மின்சாரம் முக்கியமானதாகும். நம்முடைய தொழில் வளர்ச்சி மின்சாரத்தை ஒட்டியே அமைந்துள்ளது. இனிமேல் சென்னை மாநகரத்தைப் போல கோவை மாவட்டத்தின் பகுதியைப் போல தூத்துக்குடிப் பகுதிகளிலும் விரைவில் தொழிற்கூடங்கள் பெருகும்.

"தூத்துக்குடிப் பகுதியைச் சேர்ந்த வணிகர்களும் வசதி படைத்தோரும் பரம்பரையாகச் செய்துவரும் தொழில்களையே நம்பியிராமல் புதிய தொழில்களைத் தொடங்க வேண்டும். இதனால் தொழிற்கூடங்கள் நிரம்பிய பகுதியாகத் தூத்துக்குடிப் பகுதி வளரும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தினால் தூத்துக்குடிப் பகுதி பெரும் நன்மைகளைப் பெறுவது உறுதி.

தூத்துக்குடி அனல்மின்நிலைய நகர்க் குடியிருப்பு இரண்டாம் பகுதியைத் திறந்து வைத்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பொறுப்பு ஏற்றது முதல் நமது முதலமைச்சர் அவர்கள் மின் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைவதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

"மண்டல வாரியாக மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்று கூறப்பட்டாலும் ஒவ்வொரு மாநிலமும் மின் உற்பத்தியில் தன்னிறைவுபெறுவதன் மூலம் இந்தியா முழுவதும் மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும். ஆகவே, மண்டல அளவில் பார்க்காமல், மாநில அடிப்படையில் மின் உற்பத்தி திட்டங்களை ஆராய்ந்து மத்திய அரசு அனுமதி வழங்கவேண்டும்.

"தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் புனல் மின் நிலையங்களுக்கு உரிய வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியுள்ளோம். இனி, நம் தேவைக்கு அனல் மின் நிலையங்களை அமைப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம்.



"வரும் ஐந்தாண்டுக் காலத்தில் இன்னும் மூவாயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்தால்தான், அந்த நேரத்தில் தேவைப்படும் தமிழ்நாட்டின் மின் தேவையை நிறைவு செய்ய இயலும்.

"நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டுவதன் மூலம் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி உற்பத்தியாக இருக்கும் 1,340 மெ. வா. மின்விசை முழுவதும் தமிழ்நாட்டுக்குத் தேவைப்படும். அங்கு இரண்டாவது சுரங்க வேலை தொடங்குவதற்கு முன்பே, அங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை வாங்கிக் கொள்வீர்களா என்று உத்தரவாதம் கேட்டார்கள். அரசு சார்பில் உத்தரவாதம் அளித்துள்ளோம்.

# புதிய முறையில் மின் உற்பத்தி

இன்று உலக முழுவதிலுமே மின் சக்தி பற்றாக் குறையை நிறைவு செய்ய வேண்டிய நெருக்கடியின் காரணமாக எந்தப் புதிய வகை உற்பத்தி வாய்ப்புகளேனும் கிடைக்காதா என பெருமளவில் விடா முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் தமிழ்நாடு அரசும், இந்தப் புதிய முயற்சியில் அந்த நாடுகளுக்கு இணையாக ஆர்வங் காட்டுவதில் வியப்பேதும் இல்லை. இம்முறையில் மாக்கடல் வெப்பவிசை மாற்றமும், சூரிய விசை மாற்றமும் உயிரின கழிவின் விசைமாற்றம், உயிரின கழிவுப் பொருள் வாயுவின் விசைமாற்றம் ஆகிய சில, மாநில மின் வாரியம் கருத்தாய் செய்து வரும் மாற்று மின் உற்பத்தி வாய்ப்புகளாகும். இஃதன்றி மாநிலத்தில் குறுநீர் மின் நிலையங்கள் (Micro Hydel Station) அமைப்பதற்கு அநேக வாய்ப்புகள் உள்ளன. இதனை மாநில மின்வாரியம் சீரிய முறையில் ஆய்வு செய்து கொண்டுள்ளது. இதுவரை இத்தகைய 50 குறு மின்நிலையங்களுக்கான இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு இவ்வகையில் மொத்தம் 195.35 மெகாவாட்/815.60 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவில் மின்சார உற்பத்தி செய்ய வாய்ப்புகள் கண்டறியப் பட்டுள்ளன. பைகாரா அணை (2 மெ. வா) வைகை அணை (6 மெ. வா) கீழ்பவானி அணை (8 மெ. வா) ஆகிய இடங்களில் இக்குறு மின் நிலையங்களுக்கான திட்டங்கள் ஏற்கனவே திட்டக்குழுவின் அனுமதி பெற்றுவிட்டன. இவற்றை செயலாக்குவதற்கு தமிழ்நாடு மின் வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மாற்று மின் விசை மூலங்களைப் பயனுக்குக் கொண்டு வருவதிலும் தமிழ்நாடு மின் வாரியம் சிறிய முயற்சி ஒன்றினைச் செய்துள்ளது. சென்னைக்கு அருகிலுள்ள உத்தண்டி என்ற கிராமத்தின் அருகேஉள்ள வயற்களத்தில் ஊரக மின்மயமாக்க நிறுவனத்தின் (REC) உதவியுடன் சூரிய மின்விசை உதவியால் இயங்கும் 300 வாட் வெளிப்பாடு தரும் போட்டோ வோல்டாயிக் இறைவை ஒன்றினை நிறுவிஉள்ளது. இப்புதிய முயற்சியின் நல்ல வெற்றியினை தொடர்ந்து இன்னும் இது போன்ற பல இறைவைகளை வரும் பத்தாண்டிற்குள்ளாக ஆங்காங்கே நிறுவிட வழி காணலாம்.

ஆகவே, நெய்வேலியில் உற்பத்தியாக இருக்கும் மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டுக்குத் தரப்படவேண்டும். நமது தேவைக்குப் போக மீதியை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கலாம்.''

மின்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையின் இறுதியில், தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்ட காலத்தில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் போனசாக அளிக்கப்படும் என்றும், மின்சார வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவது போல அகவிலைப்படி அளிக்கப்படும் என்றும் அறிவித்தார்.



அவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலைய மூன்றாவது இயந்திரத்தை இயக்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''கல்பாக்கம் அணு மின்நிலையம் நடப்பு ஆண்டு முடிவிற்குள் இயங்கத்தொடங்கிவிடும்.

''தேசிய மின் அமைப்பு கிரிட் ஏற்படுத்த வேண்டும் என்பது தான் மத்திய அரசின் திட்டவட்டமான கொள்கை. ஆனால், இது குறித்து போதுமான பயன் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் எல்லா மாநில மின்வாரியங்களின் ஒத்துழைப்புடன் மனநிறைவு அளிக்கும் வகையில் தேசிய மின் அமைப்பு 'கிரிட்' அமைக்கப்படும்.






தூத்துக்குடி அனல்மின்நிலைய மலரை வெளியிட்ட மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

''நல்ல சிந்தனையில் இருந்து தான் நல்ல செயல் பிறக்க முடியும். நமது முதலமைச்சர் அவர்களின் நல்ல சிந்தனையின் விளைவாகவே நல்ல செயல்கள் தொடங்கப்படுகின்றன.

''ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மின்சாரத்தின் வளர்ச்சி முக்கியமானது. சோவியத் புரட்சிக்குப் பிறகு ''சோவியத் நாட்டுக்கு உடனடியான தேவை மின்சாரம்! மின்சாரம்!! மின்சாரம்!!!'' என்றார் லெனின்.

''இது மின்சாரக் காலம். மின் உற்பத்தியின் அளவு நம் வளர்ச்சியைக் காட்டும். மின் உற்பத்தியில் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகம் வளர்ச்சி-முன்னேற்றம் அடைந்துள்ளது. மின் உற்பத்தி பெருகியுள்ள பொழுதே தொழில் வளர்ச்சி குன்றியுள்ளது என்று சிலர் புகார் கூறுவது பொருந்தாக் கூற்றாகும். நம்முடைய தேவையும் மின்உற்பத்தியும் பெருகியிருப்பது நம் வளர்ச்சியைக் காட்டும்.''

இந்திய அரசு திட்டக்குழு உறுப்பினர் திரு. மூகமது ஃபசல்

"தமிழ்நாட்டின் மின்உற்பத்திக்கான திட்டங்களுக்குத் திட்டக்குழு எல்லா வகையான உதவிகளையும் தொடர்ந்து அளிக்கும். தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நான் ஏதேனும் உதவி செய்திருந்தால் என்னுடைய நாட்டுக்குச் செய்யும் கடமையே தவிர வேறல்ல. இந்தியாவில் ஒரு பகுதி தானே தமிழ்நாடு!

"தமிழ்நாட்டில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு மின்சாரத்தின் உபயோகம் நபர் ஒருவருக்கு 60 யூனிட்டாக இருந்தது. ஆனால் இப்பொழுது நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரம் 181 யூனிட்

டாக உயர்ந்துள்ளது. மின்சக்தி உற்பத்தியும் பயனும் உயர்ந்துள்ளது. அனைத்து இந்திய சராசரி, நபருக்கு 131 யூனிட்டாகவே உள்ளது.

"நம் நாட்டின் மின்சார உற்பத்தித் திறன் இப்பொழுது 31,000 மெகாவாட்டுகள் ஆகும். 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மின் உன்ற்பத்தியை மேலும் 19,666 மெகாவாட்டுகள் அளவுக்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

"நம் நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களின் செயல்பாடுகள் மனநிறைவு அளிக்கக் கூடியதாக அமையவில்லை. அந்நிலையங்களில் குறைபாடு கொண்டதாக உள்ள சாதனங்களை மாற்றி அமைத்து, தரமான சாதனங்கள் பொருத்தப்படவேண்டும். இதுபோன்ற ஏனைய வளர்ச்சிப் பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அனல் மின் நிலையங்களுக்கு நிபுணர் குழுக்கள் சென்று சோதனை யிட்டுக் குறைபாடுகளைத் தீர்க்க யோசனை கூறும். ஆனால் மின் நிலை யங்களுக்கு நிலக்கரி வழங்குவதை விரைவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்."



# மின்சார வளர்ச்சிக்கு முதன்மை

ஒரு நாட்டின் வளர்ச்சியில் மின்சார வளர்ச்சியின் பங்கை நன்கு உணர்ந்து, தமிழ்நாட்டின் மின்சார நிலைமையை பற்றாக்குறையிலிருந்து மாற்றியமைத்து தன்னிறைவு நிலைக்குக் கொண்டு வரவேண்டிய இன்றியமையாத் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, தமிழகத்தின் மின்சார வளர்ச்சிக்கென சிறப்பிடம் தந்து செயலாற்றி வருகிறது. தமிழ்நாட்டின் மொத்த செலவினத்தில் 35 சதவீதத்தை மின்சாரச் செலவினத்திற்கென ஒதுக்கியுள்ளதே அதற்குப் போதிய சான்றாகும்.

அதுமட்டுமல்லாமல், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மின்சார வளர்ச்சிக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 1,023 கோடி மின்சாரத்திற்கு செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ. 572.30 கோடி மின் உற்பத்தித் திட்டத்திற்கும், ரூ. 325 கோடி மின்சார வழிச் செலுத்துதல் மற்றும் வழங்கல் (Transmission and Distribution) பணிகளுக்கும் ரூ. 115 கோடி ஊரக மின் மயமாக்கல் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் ஆண்டுச் செலவாக ரூ. 220 கோடி மின்சாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி, வழிச் செலுத்துதல், வழங்கல் மற்றும் ஊரக மின் மயமாக்கம் பணிகளுக்கென முறையே ரூ. 117.25 கோடியும் ரூ. 77.21 கோடியும், ரூ. 24.54 கோடியும் பகுக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் தமிழ்நாட்டின் மின்சார வளர்ச்சிக்கு எத்தகைய முதன்மை அளிக்கப்படுகிறதுஎன்பதை எடுத்துக் காட்டும்.

பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கடந்து வந்து இன்று தமிழகத்தின் மொத்த மின்னமைப்புத் திறன் 2,929 மெகாவாட்டாக உயர்ந்து நிற்கிறது. அதில் 18 நீர் மின் நிலையங்களின் மூலம் 1,369 மெகாவாட்டும், மைய அரசின் பொறுப்பில் உள்ள 600 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி அனல்மின் நிலையத்தை உள்ளிட்டு மொத்தம் நான்கு அனல் மின் நிலையங்களின் மூலம் 1,560 மெகாவாட்டும் அடங்கும். தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் இயக்கி வைக்கப்படும் 210 மெகாவாட்திறன் கொண்ட மின்னணி மேற்கண்ட மொத்த மின்னமைப்புத் திறனை மேலும் கூட்டுகிறது.

இவ்விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே இன்னொரு மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவதைத் தவிர்த்திடும் வகையில் மின்சார உற்பத்தியை நாம் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறினேன். அந்த வகையில் நம்முடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மின் உற்பத்தியைப் பெருக்கும் இப்பணியில் ஈடுபட்டு, பாடுபட்டு வரும் அனைவரையும் பாராட்டுகிறேன்.

"கேரள மாநில அரசு, தமிழ்நாட்டுக்கு வழங்கும் மின்சாரத்திற்கு, முன்பு 28 காசுகளாக விலை நிர்ணயித்திருந்ததை இப்பொழுது 48 காசாக உயர்த்திக் கேட்கிறது. கேரளத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்தையும், கருநாடகத்தையும் தங்கள் மின்விசையை விற்பதற்கான வாணிபச் சந்தையாகக்

கருதி. வியாபாரம்பேசுகிறார்கள் இது இந்தியா ஒரே நாடு என்று பேசும், ஒருமைப்பாட்டுப் பேச்சுக்கு அர்த்தமேயில்லை என்பதைக் காட்டுகிறது.

''நாம் இங்கே நெல்லை அதிகமாக உற்பத்தி செய்கிறோம். மத்திய அரசு அதில் ஒரு பகுதியை நம்மிடமிருந்து பெற்று கேரள மாநிலத்திற்குக் கொடுக்கிறது. அப்படி கேரளத்திற்குக் கொடுக்கும் அரிசியை விற்கிற உரிமை தமிழ்நாட்டிடம் இருந்தால், அது மின்சாரத்திற்கு ஏற்றிக் கொடுக்கும் விலைக்கு நிகராக நம்முடைய அரிசிக்கும் நாம் விலை கேட்டுப் பெறமுடியும்.

''நமக்கும் கருநாடக மாநிலத்திற்கும் காவிரி நீர் பிரச்சினை தொடர்ந்து இருந்துவந்தபோதிலும், நம்முடைய வேண்டுகோளை ஏற்று கருநாடக முதல்வர் 12 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்து உதவியிருக்கிறார். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''நம்முடைய ஆறுகளை தேசிய உடைமையாக்குவதுதான் இப்பிரச்சினைகளைத் தீர்க்க ஒரே வழியாகும். ஆட்சிக்கு வந்தவுடன் நதிகளை தேசிய உடைமையாக்க வேண்டும் என்று சொன்னேன். நான் அரசியல் தெரியாமல் பேசுவதாகச் சொன்னார்கள். ஆனால், நதிகளை தேசியமயமாக்குவதுதான் பிரச்சினையைத் தீர்க்கும் என்று இப்பொழுது நம்புகிறார்கள்.

''நம்முடைய மாநிலத்தின் மின்சாரத்தேவைகளுக்குப் புனல் மின் நிலையங்களையும், அனல் மின் நிலையங்களையும் மட்டும் நம்பியிருந்தால் முடியாது. தமிழ்நாட்டுக்குப் புதிய அணு மின் நிலையங்கள் தேவை. இதற்குத் திட்டக்குழுவும் மத்திய அரசும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.''

இறுதியாக மின்வாரியத் தொழில்நுட்ப உறுப்பினர் திரு.எல்.ஆர். சப்தரிஷி நன்றி நவின்றார்.

இவ்விழாவினை முன்னிட்டு தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்டப்பகுதி முழுவதும்கொண்டிருந்த அலங்கார விழாக்கோலம் தூத்துக்குடிப் பகுதி வருங்காலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஒளியூட்டும் என்பதை உறுதிப்படுத்தியது.

**தன்னிறைவுத் திட்டம்**

கிராமப் பகுதிகளை முன்னேறச் செய்ய ஒருங்கிணைந்த முன்னோடிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம், அரசினரின் கவனத்தைச் சில காலமாகவே ஈர்த்து வருகிறது. குடிநீர், கல்வி, மருத்துவ வசதிகள் போன்றவை இதில் அடங்கும். இதில் மின்சார வாரியத்தின் பங்கானது நிலத்தளவிலான நீர்த் தொட்டிகளுக்கும், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும் தேவைப்படும் விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்கும் பணியே. 1980-81ல் முதல் கட்டமாக 69 வட்டாரங்களில் இத்தகைய தன்னிறைவுத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு இதனுடைய பயன் சென்றடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துருவில் உருவாக்கப்பட்ட ஒரு ஒப்புயர்வற்ற உன்னதமான திட்டமாகும். தானே முன்னின்று முழு உற்சாகத்தோடு இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற முதலமைச்சரின் உள்ளக் கிளர்ச்சியானது இத்திட்டத்தை முழு உற்சாகத்தோடு செயல்படுத்த நமக்கு ஊக்கத்தை அளிக்கிறது முதல் கட்டப் பணிகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட ஊக்கத்தின் காரணமாக இத்திட்டம் மேலும்150 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களுக்கு இரண்டாவது கட்டமாக விரிவாக்கப்பட்டது.

1980-81லும், 1981-82லும் முறையே 1120, 636 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும் நிலத்தளவிலான நீர்த் தொட்டிகளுக்கும், மின்சார வாரியம் மின்னிணைப்பு வழங்கியுள்ளது.



அடுத்த இதழ்

**தமிழரசு**

(1-9-1982)

# தமிழ்த்தென்றல் திரு. வி. க. நூற்றாண்டுச் சிறப்பிதழ்

# காலனித் தொழிலாளருக்கு இலவசப்பணிக்கூடம்

அந்த ஏழைத் தொழிலாளர்களின் முகத்தில் உற்சாகம் காணப்படுகின்றது.

காற்றிலும், மழையிலும், வெய்யிலிலும் தொல்லைக்கு ஆளான அவர்களுக்கு விடிவு காலம் பிறந்திருக்கிறது.

அதை எண்ணி எண்ணி அவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்திருக்கின்றனர்!

ஆம், ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில், காலணித் தொழிலாளர்களுக்குப் பணிக்கூடம் மூலம், தாழ்த்தப்பட்ட வகுப்பினைச்சார்ந்த காலணித்தொழில் புரிபவர்கள் 500 பேர் ஒவ்வொருவரும் ரூ.5000 மதிப்புள்ள பணிக்கூடம் (பெட்டிக்கடை) - ஒன்றையும், ரூ.1500 மதிப்புள்ள தையல் இயந்திரம் ஒன்றையும், ரூ 500 மானியமும் பெறுவர்.

இந்தப் பணிக்கூடங்கள் மாவட்டந்தோறும் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம் மற்றும் காஞ்சிபுரம் 50, வேலூர், 25, தர்மபுரி 25, கடலூர் 25, தஞ்சாவூர் 30, திருச்சி 30, புதுக்கோட்டை 15, கோவை 30, பெரியார் 25, சேலம் 25, ஊட்டி 20, மதுரை 40, பரமக்குடி 25, திருநெல்வேலி 25, நாகர்கோவில் 10 ஆக மொத்தம் 400 பணிக்கூடங்கள். மீதமுள்ள 100 பணிக்கூடங்களையும் மேற்கண்ட மாவட்டங்களில் தேவைக்கேற்ப வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



காலணித் தொழிலாளர்களுக்குப் பணிக்கூடம் வழங்கிய நிகழ்ச்சியில் - மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் ஆகியோர்.

வழங்கு விழா, ஜூலைத் திங்கள் 22ஆம் நாள், குறளகத்தின் முன்னே அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் நடந்தது.

ஒரு பக்கம், காலணித் தொழிலாளர்களுக்கான பத்து 'பணிக்கூடங்கள்' (Bunks) வரிசையாக வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டில் பரவலாக உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த காலணித் தொழில் செய்பவர்களில், வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வாழ்வு முன்னேற வழிவகைகள் செய்து கொடுக்க, தமிழ்நாடு அரசு, சமூக நலத்துறை மூலம் ரூ.35.00 இலட்சம் மானியமாக வழங்க ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தினை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அமல்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த நல்ல திட்டத்தின்

காலணித் தொழிலாளர்களுக்குக் கை கொடுக்கும் அந்தக் கவின்மிகு விழாவில் - கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் திரு இரா. பூர்ணலிங்கம், இ. ஆ. ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் பேசுகையில் "அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு-வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களை மேலே உயர்த்த வேண்டும் என்ற நோக்கில், புரட்சித் தலைவர் அவர்கள் இம்மாதிரியான நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்" என்றார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் தலைமை வகித்துப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தமிழக அரசியல் வரலாற்றிலேயே - இம்மாதிரி காலணித் தொழிலாளர்களுக்குப் பணிக் கூடம் வழங்கும் திட்டம் செயல்படுவது இதுவே முதல் தடவையாகும். ஏழை எளியவர்கள் மேம்பட, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட இதுபோன்ற திட்டங்கள் செயல் வடிவம் பெறுகின்றன. திட்டங்கள் வெற்றி பெற பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிகவும் தேவை''.

மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள், முதல் கட்டமாக சென்னையில் பத்து காலணிப் பணிக் கூடங்கள் வழங்கிப் பேசுகையில்- தெரிவித்தார்.

''கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இந்த ஆண்டு 4 இலட்சத்து 62 ஆயிரம் பேருக்குச் சுய வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 2 இலட்சம் பேர் ஆதிதிராவிடர்கள். இவர்களுக்காக இந்த வாரியத்துக்கு அரசு கொடுத்தது ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாய். ஆதிதிராவிடர்களுக்கு நேப்பாளத்தறி 8 இடங்களில் ரூ. 7 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுத்துள்ளோம். ஒவ்வொரு இடத்திலும் தலா 50 பேர் வேலை செய்கிறார்கள்.

''தமிழ்நாடெங்கும் புதிதாக 150 கிராமிய நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. அதில் 50 ஆதிதிராவிடர் ஏழை விதவைப் பெண்களுக்கென்று உருவாக்க அரசு முன் வந்துள்ளது. கிராமப்புற மக்களுக்குச் சாண எரிவாயு அமைத்துக் கொடுப்பதற்கும் வாரியம் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது.''

கதர் கிராமத் தொழில் வாரியத்தில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்களுக்கு விழாவில் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணைத் தலைவர் திரு பட்டுக்கோட்டை பாப்பையன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு சூ. ர. கருப்பண்ணன் இ. ஆ. ப., தொழில்துறை ஆணையாளர் திரு. எம். ஏ. கே. தய்யப், இ. ஆ. ப. வாரிய உறுப்பினர் சைதை ஆ. தமிழ்ச்செல்வன், இணை இயக்குநர் திரு. கொ. துரைராஜ் ஆகியோர் வாரியப் பணிகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

அன்றைய விழா, அடித்தளத்து மக்களுக்கு அரசு ஆற்றி வருகின்ற அரும்பணிகளை எடுத்துக் காட்டுகின்ற இனிய விழாவாக இருந்தது என்றால், அது மிகையாகாது.

**— பி. வி. ஜி.**

# திருச்சி மாவட்டத்தில் இருபது அம்சத் திட்டப்பணிகள்

புதிய இருபதம்சத் திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டப் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் பணிகள் நடை பெற்று வருகின்றன.

நலிந்த பிரிவினரில் குறிப்பாக ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடியினர் பயன் பெறும் வகையில் திருச்சி மாவட்டத்தின் பணிகள் உள்ளன. குடிசைப் பகுதியில் வீட்டுமனைகள் வழங்குவதோடு, பொருளா தார அடிப்படையில் 31,500 நலிந்த குடும் பங்களுக்கு உதவிட திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்குப் பயன்படு மளவில், குடிநீர் வசதி செய்திடவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சையில் 1982-83 ஆம் ஆண்டுக்கான இலக்கு 29,950 ஆகும். கடந்த ஜூன் திங்கள் இறுதிவரை 2.303 ஆண் பெண்களுக்குக் குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

தொலைதூர கிராமம் ஒன்று உட்பட திருச்சி மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களும் மின் ஒளி பெற்றுள்ளன. இவ்வாண்டில் 3,700 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கத் திட்டமிட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 39,264 குடும்பத்தினர் பயன் அடைவர்.

தேசிய கிராமப்புறத் திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற ஏழை எளியவர்களுக்கு 8,18,703 மனித நாட்கள் வேலைவாய்ப்பு அளிக்கப் படும். சாண எரிவாயு ஆலைகள் 780 அமைக்கப்படவுள்ளன. மாவட்டமெங்கும் ஒரு கோடி மரங்கள் நடப்பெறும். மாவட் டத்தினால் நடத்தப்பெறும் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களினால் பயன்பெறு வோரில் ஆதிதிராவிட மக்கள் 28 சதவீதம், பெண்கள் 30 சதவீதம்.

பருப்பு வகைகள் 285 மெட்ரிக் டன் னும், எண்ணெய் வித்துக்கள் 498 மெட்ரிக் டன்னும் இவ்வாண்டில் உற்பத்தி செய்யப் படும்.

ஒன்றிலிருந்து மூன்றாம் வகுப்புவரை பயிலும் 2.62 இலட்சம் ஏழை மாணவர் களுக்கு இலவச சிலேட்டு, நோட்டுப் புத்தகங் கள் வழங்கப்படும். ஆறிலிருந்து பத்து வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிட பழங்குடி மாணவர்களுக்கும் இலவசப் புத்த கங்கள் வழங்கப்படும்.

பொது விநியோகத் திட்டத்தில் தனியார் தலையீடு அறவே நீக்கப்படுகின்றது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுகள் நியாய விலைக் கடைகளை நடத்துகின்றன. புதிய இருப தம்சத் திட்டத்தின் இலக்குகளை எட்ட மாவட்டம் உறுதி பூண்டுள்ளது. அடிப் படை நிலையிலிருந்து இத்திட்டங்களைச் சிறந்த் முறையில் அமல் நடத்துவதற்காக வட்ட அளவில் திட்டங்கள் வரையப்பட்டு கண்காணிப்பு அமைப்புகளும் வலுப்படுத்தப் பட்டுள்ளன.



# கோவை பருத்தி

கோவைப் பிராந்தியத்திற்கு ஏற்ற பயிர் சுழற்சி மற்றும் ஊடுபயிர் சாகுபடி முறைகளைக் கண்டறியும் பொருட்டு செய்த ஆய்வில் சோளம்+பாசிப்பயறு —பருத்தி—வெங்காயம் — முள்ளங்கி—உளுந்து என நான்கு பயிர்கள் பயிரிடுவது மிகவும் இலாபகரமானது எனத் தெரிய வந்துள்ளது. இதைத் தொடர்ந்து மூன்று பயிர்களைக் கொண்ட பயிர் சுழற்சியான ராகி — பருத்தி+வெங்காயம்— சோளம்+அவரை அதிக வருவாய் தரவல்லது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு வேளாண் பல்கலைக்கழக உழவியல் துறையில் நடத்தப் பட்டது.

நான்கு பயிர்களைக் கொண்ட பயிர் சுழற்சியான சோளம்+ பாசிப்பயறு— பருத்தி+வெங்காயம்—முள்ளங்கி—உளுந்து பயிர்கள் மிக அதிக நிகர இலாபமான ரூ. 13,000-யை ஒரு எக்டர் நிலத்திலிருந்து ஒரு ஆண்டில் கொடுத்துள்ளன. இதைத் தொடர்ந்து மூன்று பயிர்களைக்கொண்ட பயிர் சுழற்சியாக ராகி — பருத்தி+ வெங்காயம் —சோளம்+அவரை ஒரு ஆண்டில் ஒரு எக்டரிலிருந்து ரூ. 7,000 நிகர வருவாய் தந்துள்ளது.

எனவே, காய்கறிகள் விற்பனை செய்யத்தக்க வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் நான்கு பயிர்கள் கொண்ட சுழற்சி மிக அதிக வருவாய் தரவல்லது. காய்கறிகள் விற்பனைக்குத்தக்க வாய்ப்புகள் இல்லாத இதர பகுதிகளுக்கு மூன்று பயிர் சுழற்சி ஏற்றது.

மேலும் பயிரிடப்பட்ட பயிர்களின் கழிவுப்பொருள்களை அந்நிலத்திலேயே போட்டுச்சாகுபடி செய்வதாலும், பயறு வகைகளைக் கலப்புப்பயிராக பயிரிடுவதாலும் பயிர்களுக்கு வேண்டிய இரசாயன உரத்தில் 25 சதத்தை மீதப்படுத்த முடியும் என்பது மேற்கண்ட ஆய்விலிருந்து தெளிவாகியுள்ளது. இந்தத் தகவலைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தகவல் தொடர்பு நிலையம் தெரிவிக்கின்றது.

**ஆதாரம்:** டி. என். ஏ. யு ரிசர்ச் ஹைலைட்ஸ்



# அரிய நெல் வகைகள்

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நெல்வகைகளைப் பரிசோதனை செய்து பார்த்ததில் ஒரு சில இரகங்கள் முக்கிய சில பூச்சிகளை எதிர்த்து வளரும் ஆற்றலை இயற்கையாகப் பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நெல் வகைகள் பல தரப்பட்ட வயதைக் கொண்டவையாக இருந்தன. இவ்வாராய்ச்சியினைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறையைச் சேர்ந்த திரு ஏ. முகம்மது ஹனீபா மேற்கொண்டு கீழ்க்கண்ட ஆய்வு முடிவுகளைத் தெரிவித்துள்ளார்.

**தண்டு துளைப்பான்:**

ஏ.டி.டி 16, டி.கே.எம்.5, ஏ.டி.டி 6, ஜி.இ.பி 24, பி.டி.பி 10, ரத்னா, ஏ.ஆர்.சி. 5949, 6044, கோ 19, ஏ.ஆர்.சி6150, கோ. 10, ஐ.இ.டி 2615 ஆகியவை தண்டு துளைப்பான் தாக்குதலை ஓரளவு அல்லது நன்முறையில் எதிர்த்து வளரும் ஆற்றல் பெற்றவையெனக் கண்டறியப்பட்டது:

**இலை சுருட்டுப் புழு:**

ஐஏஆர்ஐ 6658, டபிள்யூ 1268, ஆர்பி 79-117014. கெம்காபூர் (மத்திய மாநிலம்), தட்டன் சம்பா (தென் ஆர்க்காடு), இருமூடன் (மைசூர்), பொட்டமோடன் (மலபார்), விராலிசம்பா (மதுரை), துங்குவாம்பை (சைனா) வெள்ளைக் குறுவை, சோனா, (பஞ்சாப்), சுலோ (கியூ), செகியாங்ஸ்டேசன் யூனிவர்சிடி எண். 3 (சைனா), கோ 10, டிகேஎம். 8 ஜிஇபி 24 மற்றும் டிகேஎம். 6 முதலியன இலைச் சுருட்டுப் புழுவினை எதிர்த்து வளரும் தன்மை பெற்றவையெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**புகையான்:**

புகையானை எதிர்த்து வளரும் தன்மையினை ஐஇடி 4247 மற்றும் ஐஇடி 5796 ஆகிய நெல் இரகங்களைப் பெற்றிருப்பதாக மேற்கண்ட ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டது.

மேற்கண்ட தகவலை வேளாண் பல்கலைக்கழக தகவல் தொடர்பு நிலையம் தெரிவிக்கின்றது.

**ஆதாரம்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.



# தென்னையின் எதிரிகள்!

*தென்னை மரத்தை என்னென்ன பூச்சிகள் சேதப்படுத்துகிறது?*

தற்போது தென்னையிலே செந்தலைவண்டு அல்லது சிவப்புக்கூன் வண்டு, கருந்தலை வண்டு சேதம் ஏற்படுத்துகின்றது.

*சிவப்புக்கூன் வண்டின் தாக்குதல் எங்கெங்கு காணப்படுகின்றது?*

திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, கோவை இன்னும் மற்ற தென்னை பயிரிடப்படும் மாவட்டங்களிலே காணப்படுகின்றது.

*சிவப்புக் கூன்வண்டு எப்படியிருக்கும்?*

இது சிவப்பு கலந்த பழுப்பு நிறத்திலே இருக்கும். ஆறு கரும்புள்ளிகள் தெரியும். வாய் தும்பிக்கைபோல் நீண்டிருக்கும்.

*சிவப்புக் கூன்வண்டின் சேதம் எப்படி ஏற்படுத்தும்?*

இந்த கூன்வண்டு, மரத்திலே சின்ன துவாரங்கள் செய்து வட்ட வடிவமாக முட்டைகளை இடும். முட்டையிலிருந்து வெளிவர 'கிரப் புழுக்கள்' மஞ்சள் நிறமாக இருக்கும். தலை மட்டும் சிவப்பாக இருக்கும்.

இந்த புழுக்கள் இளமரங்களைத் துளைத்து மிருதுவான திசுக்களைத் தின்னும். பொதுவாக 5 வருடத்திற்கு மேற்பட்ட மரங்களிலே குருத்து பாகத்திலே இருக்கும் மரப்பட்டையிலே உள்ள துவாரங்களிலே புழுக்கள் கடித்து, வெளியே தள்ளிய சக்கைகள் இருக்கும். துவாரங்களிலிருந்து பசை போன்ற திரவம் வெளிவரும். சேதம் அதிகமானால், மரம் பட்டுப்போகும்.

*தற்பொழுது செந்தலை வண்டின் சேதம் எங்கே முக்கியமாக காணப்படுகின்றது?*

கோவை மாவட்டத்திலே குண்டடம், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, பெரியநாயக்கன் பாளையம் இன்னும் மற்ற பகுதியிலும் பரவி வருகின்றது.

*சிவப்பு கூன்வண்டுகளின் சேதத்தை எப்படித் தடுப்பது?*

தாக்கப்பட்ட மரங்களை வெட்டி எரித்துவிட வேண்டும். ஒருசில பகுதியிலே சேதம் ஏற்பட்டால், அந்த பகுதியிலே இருக்கிற புழு, கூட்டுப்புழு, வண்டுகளை எடுத்துவிட்டு தார் அல்லது சுண்ணாம்பு பூசலாம். இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்த, மரத்திலே துவாரம் செய்து ''பாஸ்டாக்ஸின்'' என்கிற மாத்திரையை மரத்துக்கு 1 வீதம் உள்ளேபோட்டு சிமெண்டு அல்லது களிமண்ணால் பூசலாம். (அல்லது) மாத்திரை போடவில்லை என்றாலும், மரத்தின் உள்ளே ஊசி மூலம் கட்டுப்படுத்தலாம். 1 லிட்டர் தண்ணீரிலே செவின் 50%, 2 கிராமோடே, லெபாசிட் 1 மில்லி கலந்து, கலந்த கலவையை ஊசி மூலம் செலுத்திக் கட்டுப்படுத்தலாம்.

*என்ன முக்கியப் பூச்சி தென்னையைத் தாக்குகிறது?*

கருந்தலைப்புழு உடல் வெள்ளையாகவும், தலை மட்டும் கருப்பாகவும் இருக்கும்.

*கருந்தலைப்புழு எப்படி சேதப்படுத்தும்?*

முதலில் இலையிலேயிருக்கிற பச்சையத்தை சுரண்டிச் சாப்பிடும். இதனால் பசுமை இல்லாமல், காய்ந்து தீய்ந்து போனது போல தெரியும். மரமே எரிந்த மாதிரி தெரியும். மகசூலும் குறையும். மட்டைகள் கீற்று பின்ன பயன்படாது. அடுப்பெரிக்கத்தான் உதவும்.

*கருந்தலைப்புழு எந்தெந்த மாவட்டங்களிலே இருக்கிறது?*

சேலம், வடஆர்க்காடு, மதுரை மாவட்டங்களிலே அதிகமாக சேதப்படுத்துகின்றது.

*கருந்தலைப்புழுவைக் கட்டுப்படுத்துகிற முறையைச் சொல்லுங்கள் ?*

புழுதாக்கிய மட்டைகளை வெட்டி எரிக்க வேண்டும். இதனால் ஓலைகளுக்குள்ளே இருக்கிற புழு, கூட்டுப்புழு எல்லாம் இறந்து விடும். சேதம் பரவாமல் தடுக்கப்படும்.







5 வயதுக்குட்பட்ட மரங்கள் உயரம் குறைவாக இருக்கும். 1 லிட்டர் தண்ணீரிலே 2 கிராம் செவின் 50 சதவிகித மருந்தை தெளித்துக் கட்டுப்படுத்தலாம். ஊசிமூலம் மருந்து செலுத்தி புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.



*மனிதர்களுக்கு ஊசி போடுகிற மாதிரி மரத்திற்கும் ஊசி போட முடியுமா?*

முடியும். 5 வயசுக்கு மேற்பட்ட மரத்தில், முதலில் முற்றிய காய்களை பறித்துவிட வேண்டும். மரத்தில் தரையிலிருந்து 3 அடி உயரத்தில் ஆகர் அல்லது உளியிலே 1 செ.மீ. சுற்றளவுக்கு 2 அங்குலம் முதல் 6 அங்குலம் வரை ஆழம் செய்யவேண்டும். அந்த துவாரத்தில் ஊசிமூலம் நுவக்ரான் மருந்தை மரத்திற்கு 4 முதல் 5 மில்லி வரை, உள்ளே செலுத்த வேண்டும். அடுத்து துவாரத்தை களிமண்ணும் பைடலானும் கலந்து மூட வேண்டும். அடுத்து 45 நாள் கழித்துதான் காய் பறிக்க வேண்டும். மருந்து செலுத்தியதன் பலன் 1 மாதம் கழித்துத் தெரியும். புதியதாக வரும் மட்டையில் பூச்சி அடிக்காது. மருந்தின் சக்தி, மூன்று மாதம் வரை இருக்கும்.

*மரத்தில் போடும் ஊசி, உச்சியில் இருக்கும் பூச்சியை எப்படி சாகடிப்பது?*

வேரில் போடும் ஊசிமருந்து, தண்ணீரோடு மரம் மருந்தையும் உறிஞ்சி, ஓலை, பாளை, காய் இவைகளில் நச்சுத்தன்மையை உண்டாக்கும். இதனால் புழுக்கள் செத்து விடும்.

*வேறு ஏதாவது பூச்சியைக் கட்டுப்படுத்த முறையிருக்கிறதா?*

இருக்கு. புழு, கூட்டுப்புழுக்களை உண்ணக்கூடிய ஒட்டுண்ணிகளை வளர்த்து, ஒரு மரத்திற்கு 15 முதல் 20 வரை, 15 நாட்கள் இடைவெளியிலே விட்டு கட்டுப்படுத்தலாம். இதை விட ஊசிமூலம் மருந்து செலுத்துகிற முறை சுலபம், மரத்திற்கு ஒரு ரூபாய்தான் செலவாகும்.

தகவல் :

**ஜி. பாலசுப்பிரமணியன்,**

உதவிப் பேராசிரியர், பூச்சிஇயல் துறை,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3.

# புதிய மீன்பிடி துறைமுகங்கள்

கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் ரூ. 234 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ரூ. 77 இலட்சம் செலவிலும் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவதற்கு 1982ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அரசு ஒப்புதல் வழங்கியது. மேற்கண்ட துறைமுகப் பணிகளின் கட்டுமானப் பணியை உடனடியாகத் தொடங்கி, குறிப்பிட்டகாலத்திற்குள் முடிப்பதற்காகக் கண்காணிப்புப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர்கள் தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக அலுவலர்கள் அடங்கிய சிறப்புப் பொறியியற் பிரிவு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மேற்கண்ட கண்காணிப்புப் பொறியாளர்அலுவலகம் நாகர்கோயிலில் இருக்கும். சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகக் கட்டுமானப் பணிகளை நாகர்கோவிலிலிருந்து அதன் நிர்வாகப் பொறியாளர் கவனிப்பார். வாலிநோக்கம் மீன்பிடி துறைமுகக் கட்டுமானப் பணிகளைக் கீழக்கரையிலிருந்து அதன் நிர்வாகப் பொறியாளர் கவனிப்பார். உட்கோட்ட அலுவலர்கள் பணி இடங்களில் இருந்து செயலாற்றுவார்கள்.

# சேலத்தில் தன்னிறைவுத் திட்டம்

தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் மூன்று கட்டமாகச் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் முதல் கட்டத்தில் ஐந்து வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டச் செயல்பாடு 1980-81ல் முடிவடைந்தது.

சேலம் மாவட்டத்தில் 1981-82ம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் 2-ஆம் கட்டமாக 16 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ரூ. 331.93 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியது. ஊராட்சி ஒன்றியங்கள் இத்திட்டத்திற்காக அவைகளின் நிதியிலிருந்து ரூ.107.81 இலட்சம் பங்குத்தொகையாக அளித்ததனால் மொத்தம் ரூ. 439.74 இலட்சம் தொகையில் இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அத்திட்டத்தில் இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள் கட்டுதல், கிராமிய மருந்தகங்கள், மகப்பேறு நிலையங்கள் மற்றும் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற 1,412 பணிகளை எடுத்துச் செய்யப்பட்டன.

இந்த திட்டத்தை மிகச் சிறந்த முறையில் செயலாக்கி. மேற்கொண்ட எல்லாப் பணிகளையும் சிறப்பாகவும், முனைப்பாகவும், செய்து முடிந்தமைக்கு அயோத்தியா பட்டணம் ஊராட்சி ஒன்றியம் முதலாவதாகவும், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் இரண்டாவதாகவும், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம் மூன்றாவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்பட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் மிகவும் போற்றற்குரியன.



# நெசவாளர் வீடு கட்டும் திட்டத்திற்கு அதிகப்படியான கடனுதவி

கூட்டுறவு இயக்கத்தைச் சார்ந்துள்ள நெசவாளர்களின் நலனுக்காக, தமிழ்நாடு அரசு அமல் நடத்திவரும் நல்வாழ்வுத் திட்டங்களுள் ஒன்று நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டமாகும். இதுவரை வீடு ஒன்றின் உச்ச மதிப்பீடு (நிலம் உட்பட) ரூ. 8,000/– ஆக இருந்தது. இதில் ரூ. 5.600/-ஐ அதிகப்பட்சக் கடனாக ''ஹட்கோ'' நிறுவனத்தின் மூலமும் ரூ. 1,000/- தமிழ்நாடு அரசிடமிருந்து மானியமாகவும் வழங்கப்பட்டு வந்தது. வீட்டின் மொத்த மதிப்பீட்டில் மீதித் தொகையான ரூ. 1,400/- ஐ இத்திட்டத்தில் பயனடைபவர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்தது. கடந்த 8-6–1982 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய கைத்தறி மற்றும் கைத்தறிந்தொழில் குழுவின் கூட்டத்தில் தமிழக கைத்தறி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள், வீடு கட்டுவதற்கான மூலப் பொருள்களின் விலை ஏற்றத்தின் காரணத்தை முன்னிட்டு, நெசவாளர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ், வரையறுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 8,000/-லிருந்து ரூ. 12,000/- ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று ''ஹட்கோ'' நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளலாம் என ஆலோசனை கூறினார். இதன் தொடர்பாக ''ஹட்கோ'' நிறுவனம் 1-7-82 முதல் நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டுத் தொகையை ரூ. 12,000/ ஆக உயர்த்தியுள்ளது.



# தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழகத்தில் பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவும் பொருட்டு இந்திய நிறுமச் சட்டம் 1956-ன்படி, ''தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்'' 1974-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்கியது. இக் கழகம் கீழ்கண்ட இடங்களில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான உரிமங்களைபெற்றிருந்தது.

தஞ்சாவூர் தாலுகா
பெரம்பலூர் தாலுகா
சங்கரன்கோவில் தாலுகா
திருக்கோவிலூர் தாலுகா
சிவகெங்கை தாலுகா

தஞ்சாவூரில் ஒன்றும், பெரம்பலூரில் ஒன்றுமாக இரு சர்க்கரை ஆலைகளை இக்கழகம் நிறுவியுள்ளது. தஞ்சாவூர் ஆலை அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை என்றும், பெரம்பலூர் ஆலை-ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை என்றும் பெயரிடப் பட்டுள்ளது. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் அறுவையைத் தொடங்கின. இனிமேல் புதியதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் மாறுபட்ட கொள்கைக்கிணங்க உளுந்தூர்ப்பேட்டை தாலுகாவிலுள்ள பெரிய செவலை கிராமத்தில் நிறுவப் பட்டுள்ள சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. மீதமுள்ள இரு உரிமங்களையும் செயல் படுத்துவதற்குச் சரிவர நட



வடிக்கை எடுக்காத காரணத்தால் சங்கரன் கோவில் மற்றும் சிவகெங்கை ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலை நிறுவ வழங்கிய இரு உரிமங்களையும் மத்திய அரசு ரத்து செய்து விட்டது. போதிய அளவு கரும்பும் தண்ணீரும் கிடைக்காததுதான் மேற்படி இடங்களில் சர்க்கரை ஆலைகள் நிறுவ முடியாமைக்கு காரணமாகும்.





முன் வராத காரணத்தால் தமிழ்நாடு அரசு ரூ. 515 இலட்சங்கள் வழிவகை முன் பணமாக கொடுத்து ஆலையை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க உதவி செய்தது.

செங்கை மாவட்டம் திருத்தண வட்டத்தில் நாள் ஒன்றுக்கு 1250 டன் கரும்பு அறவை செய்யும் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவவதற்கு மத்திய அரசு 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் உரிமம் வழங்கியுள்ளது. மேற்படி ஆலையை நிர்மாணிக்கும் பொறுப்பை மாநில அரசு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் அளித்துள்ளது. குறிப்பிட்ட கால கெடுக்குள் முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

றுக்கு 15 டன் உற்பத்தி திறன் கொண்ட சிறிய காகித ஆலை ஒன்றை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அருகில் நிறுவ இக்கழகம் பணிக்கப்பட்டுள்ளது. அரசின் பங்கு மூலதனமாக ரூ, 30 இலட்சம் 1979-80 ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆலை அமைக்கும் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றது. மேற்படி ஆலையை நிர்மாணிக்க உதவும் பணியில் ஆலோசனைகள் கூறும் பணிக்காக கோயம்புத்தூர் மாவட்டம் மடத்துக்குளத்திலுள்ள மெசர்ஸ் வெங்கடேசா கன்சல்டென்ட் என்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய கரும்பு அறவைக்கு பயன்படும் உருளைகளை சீர் அமைக்கவும், உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்யவும் தொழிற் பட்டரை ஒன்று நிறுவ உத்தேசித்துள்ளது. இதற்கான இடத்தை சென்னை பெருநகர் அபிவிருத்திக் கழகம் மறைமலை நகரில் சுமார் 5.50 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்தை ஒதுக்கியுள்ளது.



தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் உளுந்தூர்ப்பேட்டை கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்று குறிப்பிட்ட கால கெடுவான **1980-ம்** ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் நிர்மாணித்து மேற்படி ஆலை தனது அறவையை *16.10.80* அன்று துவங்கியது. நிதி நிறுவனங்களான இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி, இந்திய தொழில் நிதிக் கழகம் மற்றும் இந்திய தொழில் கடன் முதலீட்டுக் கழகம் ஆகியவைகள் உரிய நேரத்தில் மேற்படி ஆலைக்கு கடன் வசதி அளிக்க

பொதுத்துறையில் இயங்கி வருகின்ற அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம்' தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எறையூர், திருச்சி மாவட்டம் ஆகியவற்றின் 1980-81 (1.10.80-30.9.81) ஆண்டிற்கான செயல்திறன் விவரங்கள் பின் வருமாறு:

கூடுதலாக கிடைக்கும் கரும்பு சக்கையைக் கொண்டு நாளொன்

அரசின் பங்குத் தொகையான ரூ. 20.00 இலட்சம் வழங்குமாறு தமிழ்நாடு அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி வழங்கப்பட்டவுடன் மேற்கொண்டு வேலைகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

இம்மாநிலத்தில் எங்கெல்லாம் கரும்பு பயிரிடப்பட வாய்ப்புள்ளதோ அம்மாதிரியான சில இடங்களில் சிறிய சர்க்கரை ஆலை அமைப்பதில் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் தீவிரப் பங்கு ஏற்றுள்ளது.



பயிருக்கு இடப்படும் பரஸ்பரஸ் இரசாயன உரங்களில் பெரும்பகுதி மண்ணில் முடக்கப் பட்டு மிகச்சிறிய அளவான 10 சதம் முதல் 30 சதம் அளவே உடனடியாகக் கிடைக்கும். இக்குறையை நிவர்த்திக்க தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறை யினர் முயன்று மகத்தான வெற்றியும் கண்டுள்ளனர்.

ராகி, கம்பு, மக்காச்சோளம், சோளம் மற்றும் கோதுமை ஆகிய பயிர்களின் வேர் மண்டலத்தில் பெருகி வளரும் ஒருவகை பாக்டீரியாக்கள் நன்மை பயப்பதாகக் கண்டறி யப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக கம்புப் பயிரின் வேர் மண்டலத்தில் இயற்கையில் காணப்படும் பாக்டீரியாக்கள் டிரை-கால்சியம் பாஸ்பேட்டாக எளிதில் கரையாத வடிவிலுள்ள

# பயனுள்ள நுண்ணுயிர்கள்



பாஸ்பரஸ் சத்தைக் கரைத்து பயிர்கள் கிரகித் துக்கொள்ளும் வகையில் உதவுகின்றன என்பது நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியினை அளிக்கும் செய்தியாகும்.



பிடி. 3 என்ற எண் கொடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வகை பாக்டீரியா, டிரைகால்சியம் பாஸ்பேட்டிலிருந்து 82.8 சதம் பாஸ்பரஸ் சத்தை பிரித்தெடுத்து பயிர்கள் கிரகிக்கும் வகையில் அளிக்கின்றன.

இவ்வகை பாக்டீரியாக்களையும், மற்ற ரைசோபியம் பாக்கட் போன்று விவசாயிக ளுக்கு விநியோகம் செய்யும் நாள் வெகு தொலைவில் இல்லை எனத் தோன்றுகிறது. இத்தகவலைத் தெரிவிப்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தகவல் தொடர்பு நிலையம்.

# கல்வெட்டு ஆய்வு

நமது இந்தியத் திருநாட்டின் தொன்மை வரலாறு எழுதுவதற்குக் கல்வெட்டு என்ற ஒரு வரலாற்றுக் கருவூலம் இருப்பதையே வெளிநாட்டார்தான் நமக்குப் புலப்படுத்தினர். 1837-ஆம் ஆண்டு முதன் முதலில் ஜேம்ஸ் பிரின்சப் என்னும் வெளிநாட்டார் இந்தியாவில் உள்ள கல்வெட்டுக்களை எல்லாம் திரட்டிப் பார்த்து அறிந்தோமென்றால், இந்தியாவின் பழமையான வரலாற்றை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டார். இந்தியாவில் தொல்லியல் ஆய்வு சிறப்பாக அமைவதற்குக் காரணமாக இருந்தவரும் அவரே ஆவார். அவரது கருத்து வெளியானதற்குப் பிறகு 'ஆசியாவின் ஆராய்ச்சிகள் ( Asiatic Researches ) ஆசியக் குழுவின் 'இதழ், ( Journal of the Asiatic Society ) இந்தியாவின் பழமை (Indian Antiquery) ஆகிய நூல்களில் இந்தியாவில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் பற்றி சில கட்டுரைகள் வெளிவர ஆரம்பித்தன.

இந்திய அரசால் 1861-ல் நியமிக்கப்பட்ட தொல்லியல் ஆய்வாளர் (Archaeological Surveyor) என்னும் அலுவலர் இந்தியாவில் காணப் பெறும் கல்வெட்டுக்களையெல்லாம் படியெடுப்பதற்கும், இவற்றைப் படித்து நூல் வடிவில் வெளிக்கொணர்வதற்கும் ஏற்பாடுகள் செய்தார். அவ்வாறு படியெடுக்கப்பட்டு, படிக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் மௌரியப் பேரரசன் அசோகன் காலத்தவைகளை எல்லாம் ஒன்று திரட்டி, 'அசோகன் காலத்தியக் கல்வெட்டுக்கள் என்று ஒரு தனித் தொகுதியை 1871 முதல் 1885 வரை இந்திய அரசு தொல்லியல் துறையின் டைரக்டர் ஜெனரலாக இருந்த அலெக்சாண்டர் கன்னிங்காம் என்பவர் வெளியிட்டார். அதே போன்று இந்திய அரசாங்கத்தின் முதல் கல்வெட்டாய்வாளராக விளங்கிய ஜே. எப்ஃபிளீட் (1883-86) என்பாரும் குப்தர் காலத்திய கல்வெட்டுக்கள் அனைத்தையும் தொகுத்து ஒரு தனித் தொகுதியாக வெளிக் கொணர்ந்தார்.

சென்னை அரசாங்கத்தின் முதல் கல்வெட்டாய்வாளராக விளங்கிய இ. ஹீல்ட்ஷ் (1886-1903) என்பார் தென்னிந்தியக் கல்வெட்டுக்களின் முதல் தொகுப்பை 1903-ல் வெளியிட்டார். இதற்கும் ஒரு ஆண்டுக்கு முன்பாக அலெக்சாண்டர் கன்னிகஹாமை அடுத்து டைரக்டர் ஜெனரலாக பதவியேற்ற ஜே. பர்ஜஸ் என்பார் எபிகிராபியா இண்டிகா (Epigraphia Indica) என்னும் இதழைக் கல்வெட்டுக்கள் பற்றி மட்டும் வெளியிடுவதற்காகவே தொடங்கினார். இதுவரை முப்பத்தெட்டுத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

சென்னை அரசாங்கத்தின் கல்வெட்டிலாகாவினர் படியெடுத்த கல்வெட்டுக்களின் முக்கிய குறிப்பை 'தென்னிந்தியக் கல்வெட்டு அறிக்கை' (Annual Report of South Indian Epigraphy) என்ற அறிக்கையினை 1887 முதல் வெளிவர ஆரம்பித்தன. நாளடைவில் 1945-46-லிருந்து இந்தியக் கல்வெட்டுக்களின் ஆண்டறிக்கை என்றபெயரில் வெளி வருகிறது. இதுவரை 1967-68 ஆண்டறிக்கை வரை வெளி வந்துள்ளது.

**நடன. காசிநாதன்**
**துணை இயக்குநர்**
**தொல்பொருள் ஆய்வுத் துறை**

கல்வெட்டுக்களைப் படியெடுக்கத் தொடங்கி அரை நூற்றாண்டு

முதலாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டு, தஞ்சை பெருவுடையார் கோயில், தஞ்சை.(கி. பி. 11-ஆம் நூற்றாண்டு)





விக்ரம சோழன் கல்வெட்டு(கி.பி.12-ஆம் நூற்றாண்டு)

ஆவதற்குள் சுமார் 25,000 கல்வெட்டுக்களையும் சுமார் 500 செப்புப் பட்டயங்களையும் கண்டுபிடிக்க முடிந்தது. அவைகளை முறையாகப் படிக்கவும் அது பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதவும் தொடங்கியவுடன் பல தனித்தனிக் கல்வெட்டுத் தொகுதிகள் வெளிவரத் தொடங்கின. எப்ஃ. கில்ஹார்ன் அவர்களால், தயாரிக்கப் பெற்ற 'வட இந்தியாவின் கல்வெட்டுகள்' (Inscription of North India) என்ற தொகுப்பு குறிப்பிடத்தக்கதாகும். இத்தொகுப்பு எபிகிராபியா இண்டிகாவின் ஐந்தாம் தொகுதியில் பிற்சேர்க்கையாக வெளி வந்தது.

பிராமி எழுத்திலும் கரோஷ்டி எழுத்திலும் எழுதப்பட்டிருந்த இந்தியக் கல்வெட்டுக்களைப் படித்த பெருமை பிரின்சப், லேஸன், நோரிஸ், கன்னிங்ஹாம், ஜி. பூலர், செனர்ட், கீல்ஹார்ன் ஹீல்ட்ஷ், ரைஸ், எபியட், பளீட் ஆகிய வெளிநாட்டார்களையும், பகவன்லால் இந்திரஜித், ஆர். எல். மித்ரா, ஆர். ஜி. பண்டார்க்கர், வி. வெங்கையா, எச். கிருஷ்ணசாஸ்திரி, என். ஜி. மஜூம்தார், கோபிநாதராவ், கே வி. சுப்பிரமண்ய அய்யர் ஆகிய இந்திய நாட்டினரையும் சாரும்.

இந்திய மொழிகளில் வெளிவந்த சில மாத இதழ்களிலும் கல்வெட்டுக்கள் தொடர்பான கட்டுரைகளை இந்திய நாட்டைச் சேர்ந்த கல்வெட்டறிஞர்கள் எழுதலாயினர். தமிழ் நாட்டில் செந்தமிழ், 'தமிழ்ப் பொழில்' போன்ற இதழ்களில் தமிழ் அறிஞர்கள் மு. இராகவையங்கார், ஆர். இராகவையங்கார், நா. மு. வேங்கடசாமி நாட்டார், சதாசிவ பண்டாரத்தார், மயிலை சீனி. வேங்கடசாமி, சுந்தரேச வாண்டையார் போன்றோரும் கல்வெட்டுக்கள் பற்றிய கல்வெட்டுக்களை எழுதினர்.

கர்நாடக மாநிலத்திலிருந்து எபிகிராபியா கர்நாடிகா (Epigraphia Carnatica) என்ற தொகுதியும், ஜேர்னல் ஆப் மிதிகல் சொஸைட்டி (Journal of Mythic Society) என்ற இதழும் கல்வெட்டு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தாங்கிவெளிவந்தன. கேரள மாநிலத்தில் உள்ள கல்வெட்டுக்களையெல்லாம் திரட்டித் தொகுத்து திருவிதாங்கூர் தொல்லியல் வெளியீடுகள் (Travancore Archaeological Series) என்பதை மூலம் வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள கல்வெட்டுக்கள் மட்டும் தொகுக்கப் பெற்று 'புதுக்கோட்டை ஸ்டேட்டின் கல்வெட்டுக்கள் (Thirumalai Tiruppathi Devastanam Inscriptions) என்ற பெயரில் ஒரு தொகுதி வெளிவந்தது.

ஆந்திராவில் உள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் திருப்பதியில் உள்ள கல்வெட்டுக்களை எல்லாம் தொகுத்துத் 'திருமலை திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டுக்கள்' (Inscriptions of Pudukkottai State) என்ற பெயரில் ஐந்து தொகுதிகளை வெளியிட்டுள்ளனர். அக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை தமிழ்க் கல்வெட்டுக்களே ஆகும்.

தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதிகள் இதுவரையில் ஒன்று முதல் பதினான்கு வரை தொடர்ந்தும், பின்னர் பதினேழு, பத்தொன்பது, இருபத்து மூன்று ஆகிய தொகுதிகளும் வெளிவந்துள்ளன. முதல் தொகுதி மகாபலிபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள பல்லவர்களின் கல்வெட்டுக்களை உள்ளடக்கியும், இரண்டாம் தொகுதி தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களை உள்ளடக்கியும், மூன்றாம் தொகுதி சில பல்லவர், சோழர் செப்புப் பட்டயங்களை உள்ளடக்கியும் வெளிவரப்பட்டுள்ளன. நான்காம் தொகுதியிலிருந்து எட்டாம் தொகுதி வரை 1887 முதல் 1903 வரை தமிழகத்தில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களைத் தாங்கி இருக்கின்றன. ஒன்பது, பத்து, பதினொன்றாம் தொகுதிகள் ஆந்திர, கர்நாடகப் பகுதிகளில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக் கொண்டுள்ளன. பன்னிரண்டாம் தொகுதி பல்லவர் காலக் கல்வெட்டுக்களையும், பதின்மூன்றாம் தொகுதி சோழ மன்னர்களில் இராஜகேசரி என்று மட்டும் குறிக்கப்படுபவர்களின் கல்வெட்டுக்களையும், பதினான்காம் தொகுதி முற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுக்களையும், பதினேழாம் தொகுதி தமிழகத்தில் 1904-ம் ஆண்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களையும், பத்தொன்பதாம் தொகுதி சோழ மன்னர்

களில் பரகேசரி என்று மட்டுமே காணப்பெறும் கல்வெட்டுக்களையும் இருபத்து மூன்றாம்தொகுதி தமிழகத்தில் 1905-லிருந்து படியெடுக்கப்பட்ட சில கல்வெட்டுக்களையும் தாங்கி வெளி வந்திருக்கின்றன.

எபிகிராபியா இண்டிகா ஒன்று முதல் முப்பத்தொன்பது வரை தொடர்ந்து வெளி வந்துள்ளன. இத்தொகுதிகளில் இந்தியாவில் காணப்பெறும் முக்கிய சில கல்வெட்டுக்களை வரலாற்றிஞர்களும், கல்வெட்டறிஞர்களும் ஆராய்ச்சிகளைக் கொண்டு ஆய்ந்து கட்டுரை எழுதி உள்ளார்கள். இத்தொகுதிகளைப் போன்றே ஜேர்னல் ஆப் மித்திக் சொசைட்டி (Journal of Mythic Society ) தொகுதிகளிலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதப்பட்டு இருக்கின்றன. வரலாற்றாய்வாளர்களுக்கு இக்கட்டுரைகள் மிக மிக இன்றியமையாதவைகளாகும்.



சோழர் காலச் செப்புப்பட்டயம்.

1887 முதல் 1938 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் எந்தெந்த மாவட்டத்தில், எந்தெந்த ஊரில் தமிழகத்தில் படியெடுக்கப்பட்டன என்ற விவரம் அடங்கிய 'படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் வரிசை (List of Insc iptions Copied என்ற ஒரு தொகுதியும், அக்கல்வெட்டுக்கள் எந்தெந்தக் குல மன்னர்களைச் சார்ந்தவை, அவைகளில் காணப்பெறும் சில முக்கிய செய்திகள் ஆகியவை உள்ளடக்கிப் 'பகுதித் தொகுப்பு' (Subject Index ) ஒன்றும் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இத்தொகுதிகள் கல்வெட்டுக்களைப் பற்றி ஆய்வு செய்வோருக்குப் பெரிதும் உதவுபவைகளாகும். இதைப் போன்றே சென்னை மாகாணக் கல்வெட்டுக்களின் வரிசை (A Topographical list of the Inscription of Madras presidency என்ற பெயரில் மூன்று தொகுதிகள் சென்னை அரசாங்கத்தால் வெளிக் கொணரப்பட்டன. இவை 1887 முதல் 1915 வரை படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் தொகுப்பாகும். இதில் ஒவ்வொரு கல்வெட்டினைப் பற்றியும் அது எந்த மன்னன் காலத்தியது, அதில் குறிக்கப்பட்டுள்ள முக்கிய குறிப்பு ஆகியவை தரப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இருந்த மேல்நாட்டதிகாரிகளான சீவல், மெக்கன்சி போன்றோர் தனிப்பட்ட முறையில் சில கல்வெட்டுக்களை நேரிடையாகப் படித்துக் குறிப்பெடுத்தும்; மேலும் பலரை அணுகி அவர்களிடமிருந்து பெறப்பட்ட செய்திகளைச் சேகரித்தும் நூல்கள் வெளியிட்டுள்ளனர். 'தென்னிந்திய வரலாற்றுக் கல்வெட்டுக்கள்' (The Historical Inscriptions of Southern India என்னும் பெயரில் ஒரு தொகுதி ஜை. சீவெல்லும், 'மெக்கன்சி கையெழுத்துப்பிரதிகள்(Meckenzie Manuscripts) என்ற பெயரில் சில தொகுதிகளை மெக்கன்சியும் வெளியிட்டனர்.

சென்னை அரசாங்கத்துக்கீழ்த் திசை ஓலைச்சுவடி நூலகத்திலும், தஞ்சாவூர் சரசுவதிமஹால் நூல் நிலையத்திலும் இருந்த கையெழுத்துப் பிரதிகளில் காணப்பட்ட கல்வெட்டுக்களின் வாசகங்களைத் தொகுத்து அவற்றுக்கு உரிய விளக்கக் குறிப்புக்களைச் சேர்த்து சென்னை அரசு ''தென்னிந்திய கோயிற் சாசனங்கள்'' ( South Indian Temple Inscriptions) என்ற பெயரில் மூன்று தொகுதிகளை வெளிக் கொணர்ந்துள்ளது. இத்தொகுதிகளின் மூன்றாம் தொகுதியின் இரண்டாம் பகுதியில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கல்வெட்டுக்கள் ஆகராதி ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், எழுத்துக்களின் வளர்ச்சி பற்றியும் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் இருந்த தமிழ் வரலாற்றுக் கழகம் என்ற குழு பல்லவர் காலச் செப்புப் பட்டயங்களையெல்லாம் ஒன்று சேர்த்து 'பல்லவர் செப்புப் பட்டயங்கள்' என்று ஒரு தொகுதியும், டாண்டியர் காலச் செப்புப் பட்டயங்களை ஒன்று சேர்த்து 'டாண்டியர் செப்புப் பட்டயங்கள்' என்றும் இரு தொகுதிகளை வெளியிட்டுள்ளது. இத்தொகுதிகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக உள்ளன. 'பாண்டியர் செப்பேடுகள்' என்ற தொகுதியில் ஆய் மன்னர்களின் செப்பேடுகளான நான்கு செப்பேடுகளும் சேர்த்து வெளியிடப் பெற்றுள்ளன. இவைகளைப் போன்றே சோழர் காலச் செப்பேடுகளை உள்ளடக்கிய ஒரு தொகுதியை வெளியிட வேண்டும் என்ற ஒரு கருத்தைத் தமிழ் நாடு அரசு . தொல்பொருள் ஆய்வுத்துறை கொண்டுள்ளது.

சென்னை அருங்காட்சியகம் 'இந்தியச் சாசனவியலும் தென்னிந்திய எழுத்துக்களும்' என்ற நூலைப்பதிப்பித்துள்ளது. அதில் இந்திய நாட்டில் காணப்பெறும் முக்கியமான எழுத்துக்களின் வளர்ச்சி அட்டவணைகள் சேர்க்கப்பட்டு கல்வெட்டுக்கள் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை தமிழகத்தில்

காணப்பெறும் கல்வெட்டுக்கள் அனைத்தையும் படியெடுத்து நூலாக வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் விரைந்து செயல்பட்டு—

1. சென்னை மாநகர் கல்வெட்டுக்கள்.

2. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்.

3. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் 1 முதல் 5 தொகுதி வரை.

4. செங்கம் நடுகற்கள்.

5. தருமபுரி மாவட்டக் கல்வெட்டுக்கள். (2 தொகுதிகள்)

6. தருமபுரி மாவட்ட நடுகற்கள்.

7. நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள். (3 தொகுதிகள்)

8. கும்பகோணம் வட்டக் கல்வெட்டுகள்).

9. திருத்துறைப்பூண்டி வட்டக் கல்வெட்டுகள்.

என்று பல கல்வெட்டுத்தொகுதிகளை பதிப்பித்துள்ளது. இக் கல்வெட்டுக்கள் தமிழகத்தின் பண்டைய வரலாறு பற்றி ஆய்வு செய்வார்க்கு மிகவும் உதவிரகமாக உள்ளன. அதுமட்டுமல்லாமல் 'தமிழகம்' (Damilica) என்று ஒரு ஆண்டு இதழையும்; 'கல்வெட்டு' என்று ஒருகாலாண்டு இதழையும் வெளியீட்டு வருகிறது. இவ்விதழ்களில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய கல்வெட்டுக்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன.

மேலும், கல்வெட்டுக்களைப் பற்றி பாமர மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்டத்துக்கு மாவட்டம் கல்வெட்டுக் கருத்தரங்குகளையும் கல்வெட்டுக் காட்சிகளையும் நடத்தி வருகிறது. கல்வெட்டுக் கருத்தரங்குகளில் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூல்கள் வெளியிட்டுள்ளது. சென்னையில் நடைபெற்ற கல்வெட்டுக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரைகளைத் தொகுத்து கல்வெட்டுக் கருத்தரங்கு (Seminar on Inscriptions) என்ற பெயரில் ஒரு நூலைக் கொண்டு வந்துள்ளது. அதே போன்று நடுகல் கருத்தரங்கு ஒன்று நடத்தி 'நடுகல் கருத்தரங்கு' (Seminar on Hero-Stones) என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் மே திங்களில் கல்வெட்டுப்பயிற்சி வகுப்பு நடத்துகிறது. முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து ஒரு ஆண்டு டிப்ளமோ வகுப்பை அமைத்துக் கல்வெட்டில் பயிற்சி தருகிறது.

இந்தியக் கல்வெட்டுக் கருத்தரங்கு (Indian Epigraphical Congress) என்று ஒரு கருத்தரங்கு ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இதில் இந்தியாவில் அவ்வவ்வாண்டு கிடைக்கும்புதிய கல்வெட்டுக்கள் பற்றிக் கட்டுரைகள் படிக்கப்படுகின்றன. பின்னர் அவைகள் நூல்களாகத் தொகுக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு பல ஆய்வுக் கட்டுரைகள் பலவித சஞ்சிகைகளில் வெளிவர ஆரம்பித்தன. சென்னையில் 'கொங்கு' என்ற மாத இதழிலும், தமிழக வரலாற்றுப் பேரவையினரால் வெளியிடப்பட்ட ஆண்டிதழான தென்னிந்தியாவைப் பற்றியநூல் (South Indian Studies) தமிழக ஆராய்ச்சிப் பேரவை வெளியிட்ட 'ஆய்வுக்கொத்து' போன்றவற்றில் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதப்பட்டிருக்கின்றன. கொங்கு இதழில் கல்வெட்டுச் சொற்கள் சிலவற்றுக்குப் பொருளும் தரப்பட்டிருக்கின்றன.

தனிப்பட்டவரான மார்ரே இராஜப் என்பவரின் கல்வி நிறுவனம், தமிழகக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் சொற்களுக்கு உரிய பொருளைத் தொகுத்துத் தரும் பெரும் பணியில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுச் செய்து வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தொல்லியல் துறை 'தென்னிந்தியப் பழமை எழுத்தியல்' (South Indian Palaeography) என்ற பெயரில் ஒரு நூலையும், மெக்கன்சி அவர்களால் சேகரிக்கப்பட்ட கையெழுத்துப்பிரதிகளில்காணப் பெற்ற கல்வெட்டுக்களைத் தொகுத்து ஒரு நூலையும் வெளியிட்டுள்ளது. மேலும், தமிழகத்துக் கல்வெட்டுக்களை மாவட்ட அடிப்படையில் பிரித்து, பொருட்குறிப்பு எழுதி வெளியாகும் பணியிலும் ஈடுபட்டுள்ளன.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி பெற்று, பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் திரட்டி விளக்கக் குறிப்புக்களோடு வெளியிடும் பணியில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையின் முன்னாள் பேராசிரியர் டி. வி. மகாலிங்கன் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தியாவின் மிகப் பழமையான எழுத்தான ஹரப்பன் எழுத்தைப் பற்றி பல நாட்டு அறிஞர்களும் ஆய்வு செய்து அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றனர். குறிப்பாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐராவதம் மகாதேவன் அவர்கள் ஹரப்பன் எழுத்தைப் பற்றி ஆய்ந்து ஹரப்பன் எழுத்துக்களைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அது ஹரப்பன் எழுத்துக்களின் தொகுதி (Concordance of Harappan Scripts) என்ற பெயரில் வெளி வந்துள்ளது. ஹரப்பன் எழுத்தைப் பற்றி ஆய்வு செய்வோர்க்கு அடிப்படை நூலாக அது அமைந்துள்ளது.

ஜப்பானிலுள்ள டோக்கியோ பல்கலைக் கழகத்தின் தென் ஆசிய வரலாற்றுத் துறை சோழர் காலக் கல்வெட்டுக்களில் காணப் பெறும் பெயர்களை எல்லாம் திரட்டி 'சோழர் காலக் கல்வெட்டுக்களில் பெயர்கள்' (A Concordance of the Names in the Chola Inscriptions) என்ற பெயரில் மூன்று தொகுதிகளை வெளிக்கொணர்ந்துள்ளது மேலும் சோழர்களின் தமிழ்க் கல்வெட்டுக்கள் வரிசை (A List of the Tamil Inscriptions of the Cholo Dynasty) என்ற ஒரு நூலையும் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்காவிலுள்ள ஜாப்னா தொல்லியல் குழுவினரால் 'எபிகிராபியா தமிலிகா' (Epigraphica Tamilica) என்ற ஒரு சஞ்சிகை வெளியிடப்படுகிறது. இதில் ஸ்ரீலங்காவிலுள்ள தமிழ்க் வெட்டுக்கள் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலுள்ள இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் இன்னமும் பல ஆயிரம் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட வேண்டிய நிலையிலும் சில கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன. சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ்நாடு அரசு ஒரு மிகப் பெரிய கல்வெட்டை இராமநாதபுரம் மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடித்துள்ளது. இக் கல்வெட்டு இற்றைக்குச் சுமார் 1,700 அல்லது 1600 ஆண்டுகட்கு முற்பட்டது ஆகும். 1861-ஆம் ஆண்டில் கல்வெட்டாய்வு தொடங்கப் பெற்று இதுவரையில் சுமார் எழுபத்தையாயிரம் கல்வெட்டுக்களைப் படியெடுத்திருந்த போதிலும், பூலாங்குறிச்சி கல்வெட்டு போன்று இன்னும் சில ஆயிரம் கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப் படாமலேயே இந்தியாவில் உள்ளன. கல்வெட்டு ஆய்வில் பெரும் ஆர்வம்கொண்டு செயல்பட்டு வரும் இந்திய அரசும் மாநில அரசுகளும் அவைகளை விரைவில் கண்டுபிடித்து, ஆராய்ச்சியாளர்களின் பார்வையில் வைப்பதற்காக ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றன.

# கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

## நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டங்களில் 1.7.1979 முதல் நடைபெற்றுக் கொண்டு உள்ளது. இதுகாறும் பொள்ளாச்சி வட்டத்தில் 53 வருவாய் கிராமங்களிலும், உடுமலைப்பேட்டை வட்டத்தில் 41 வருவாய் கிராமங்களிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொள்ளாச்சி வட்டத்தில் 7.755 பட்டாக்களும், உடுமலை வட்டத்தில் 9.370 பட்டாக்களும் வழங்கப்பட்டு உள்ளன. நடப்பு ஆண்டில் பொள்ளாச்சி வட்டத்தில் 36 கிராமங்களிலும், உடுமலை வட்டத்தில் 25 கிராமங்களிலும் மாதம்தோறும் நிறைவேற்ற திட்டம் வகுக்கப்பட்டுச் செயல் படுத்தப்படுகிறது.

இத்திட்டப்பணிகளை வேகமாக நிறைவேற்றுவதற்குப் பொள்ளாச்சி வட்டத்தில் புதிதாக ஒரு பிரிவும், உடுமலை வட்டத்தில் புதிதாக ஒரு பிரிவும், பல்லடம் வட்டத்தில் புதிதாக இரண்டு பிரிவுகளும், உருவாக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் நான்கு வட்டாட்சியர்கள், நான்கு ஆய்வாளர்கள் எட்டு துணை ஆய்வாளர்கள், 40 உதவி சர்வே ஆய்வாளர்கள், 240 களச் சர்வேயர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.



## அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகங்கள்

கோவை மாவட்டத்திலுள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டுகின்ற பணி தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ. 2.56 இலட்சம் செலவிலும் ஐயங்காளிபாளையம் அரசு மேல் நிலைப் பள்ளியில் ரூ. 2.56 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## உடல் ஊனமுற்ற பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் இலவசம்



உடல் ஊனமுற்ற குழந்தைகள் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்புவரை கல்வி கற்போருக்குத் தலா ரூ. 25/– வீதம் பாடப் புத்தகங்கள் நோட்டுப்புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கப்படும். இதற்காகக் கோவை மாவட்டத்திற்கு ரூ. 16,000-ம் ஒதுக்கீடு செய்யப் பட்டு இருக்கிறது.

## பிற்பட்ட வகுப்பினருக்குப் பல்வேறு பணிகள்

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சலவைத் தொழிலாளி 225 பேருக்கும் சவரத் தொழிலாளி 200 பேருக்கும், போயர்கள் 40 பேருக்கும், தொழில் கருவிகள் வாங்கித்தரப் பட்டுள்ளது. நடப்பாண்டில் கோயில்பாளையம், மடத்துக்குளம், பூலவாடி, பொங்கலூர், சுல்தான்பட் ஆகிய இடங்களில் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்காகப் புதிதாகத் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட இருக்கின்றன.



# உழவர் பெருமக்களுக்கு..

நெல்லில் துங்ரோ வைரஸ் நோயை எதிர்த்து வளரும் ஐ. ஆர். 59 என்ற ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பயறு விதைகளை ஊக்குவிக்கப்பட்ட *களி*மண்ணோடு கலந்து வைத்தால், ஓராண்டு காலத்திற்கு எந்தவிதப் பூச்சித்தாக்குதலுமின்றி சேமித்து வைக்கமுடியும்.

தைல மரத்திற்கு நாற்றுவிடும்போது **3.5** கிராம் வரை விதையளவை எடுத்து விதைத்தால், நல்ல வளமான நாற்றுக்களைப் பெறமுடியும்

எலுமிச்சையில் **0.5** சதம் துத்தநாகம் அல்லது மங்கனீசு நுண்ணூட்டங்களை தெளித்தால், அதிக மகசூல் பெறமுடியும்.

மாமரத்தைப் பூக்கும்படி செய்ய **0.5** சத யூரியாக் கலவையைத் தெளித்துப் பலன் பெறலாம்.



விளக்குப்பொறி வைத்தால், நிலக்கடலையைத் தாக்கும் கரும்பூச்சிகளை எளிதில கவர்ந்து ஒழிக்கமுடியும்.

சாணக்கரைசலுக்குப் பதிலாக சமையல் சோடா உப்பைப் பயன்படுத்தி மஞ்சளை நல்ல முறையில் பதப்படுத்தலாம்.

மேற்கண்ட புதிய யுக்திகளைக் கடைபிடித்து உழவர் பெருமக்களே அதிக லாபம் பெறுங்கள்!

வெளியீடு ; தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



# வங்கி இல்லாப் பகுதியில் வாழ வேண்டாம்!

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி.

'வங்கி இல்லாப் பகுதியில் வாழ வேண்டாம்' என்பதைப் புதுமொழியாகக் கொள்ளலாம் என்றார் ஒருவர்.

ஆம். அது உண்மையாகவே பட்டது. இன்று நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஏறக்குறைய வங்கிக் கிளைகள் உள்ளன.

'சேமித்தால் சேமமுற வாழலாம்' என்னும் நல்ல பழக்கம், சிறுவயது முதற்கொண்டே வழக்கத்துக்கு வரவேண்டும் என்பதற்காக, பொதுவாக எல்லா வங்கிகளிலும் சிறுவர்க்கான சேமிப்புத் திட்டங்கள் உள்ளன.

பணம் போடுவதற்கு மட்டும் வங்கி பயன்படாமல், பல்வேறு சமுதாய நலப் பணிகளுக்கும் அது பக்க பலமாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம்.

வேளாண்மை முதல், வேலையின்றித் தவிக்கும் பட்டதாரிகள் வரை வங்கி கடன் உதவி தந்து, அவர்கள் கவலையின்றி வாழ வழி கோலுகிறது.

இவ்வாறு பணம் போடவும், கடன் பெறவும், யாரும் நெடுந்தூரம் போய் வர வேண்டியநிலை இல்லாமல், இன்று அவரவர் வசிக்கும் பகுதிகளிலேயே வங்கிக் கிளைகள் உள்ளன. ஏன், மக்களை அன்றாடம் சந்திக்கிற வகையிலே 'நடமாடும் வங்கிகள்' கூட இப்போது இயங்கி வருகின்றனவே!

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக் கிளை

இந்த வகையில், சென்னை நகரில், ஒரே நாளில், இரண்டு புதிய வங்கிக் கிளைகள் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி. மற்றொன்று, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி.

ஜூலைத் திங்கள் 27ஆம் நாள் இரு வங்கிகளும், இருவேறு பகுதிகளில் துவக்கி வைக்கப்பட்டன. சென்னை சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியில், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் 28வது கிளைத் திறப்புவிழா நடந்தது.

வங்கியின் தனி அலுவலர் திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'தமிழக அரசு செயல்படுத்தி வரும் முற்போக்குத் திட்டங்களுக்கெல்லாம் இந்த வங்கி உதவி வருகிறது' என்றார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு கே. சந்திரசூடன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், வங்கியின் பல்வேறு பணிகளை எடுத்துக் கூறி, கிளை நல்ல முறையில் வளர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு சட்டம் - கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், அதிக அளவில் கணக்கு வைத்துள்ள— எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிற மூன்று வங்கிகளுக்குச் சுழற்கேடயங்களை வழங்கினார். அவை; சாந்தோம், தங்கசாலை, செனாய் நகர்க் கிளைகள் ஆகும்.

நலிந்த பிரிவினர்க்குத் தையல் இயந்திரமும், சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்க்கு மின் இஸ்திரிப் பெட்டியும், மற்றும் நகைக் கடன்களையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வங்கி ஊழியர்கள் சார்பில் முதல்வர் அவர்களின், மதிய சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 26,000க்கான காசோலையை வங்கியின் தனி அலுவலர் திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள் அமைச்சரவர்களிடம் வழங்கினார்.

பிறகு, மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனை அனைவரும் உணர்ந்து, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முன் வரவேண்டும். அப்போது தான் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க

—பி. வி. கிரி




**சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின், ஆதம்பாக்கம் கிளையை மாண்புமிகு சட்டம்-கூட்டுறவு அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

இயலும். இந்த வகையில், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாவிட்டால், அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் சிறு விவசாயிகள் தான்.

''கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தவிவசாயிகள்கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்த்தல், பால் பண்ணை போன்ற தொழில்களில் ஈடுபட முன் வர வேண்டும்.

''மத்தியக் கூட்டுறவு வங்கி, குறுகியக் காலக் கடனாகவும், மத்தியக் காலக் கடனாகவும் ரூ. 175 கோடி வழங்கியுள்ளது. இதில் ரூ. 95 கோடியை விவசாயிகள், தாமாகவே முன் வந்து கட்டியிருக்கிறார்கள்.''

## சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக்கிளை

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் 19வது கிளை, சென்னை ஆதம்பாக்கம் தலைமைச் செயலகக் குடியிருப்பில் துவக்கி வைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. கே. சந்திரசூடன் இ.ஆ.ப. அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ஏழை எளியவர்களுக்கு கடனுதவி வழங்குவதில் இந்த வங்கி சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்றும், முதல் நடமாடும் வங்கியின் மூலம் இது மக்களுக்குச் சேவை செய்து வருகிறது என்றும் கூறினார்.

நலிந்தோர்க்குச் சிறுதொழில் கடன்களை, கூடுதல் பதிவாளர் திரு எல்.கே. திரிபாதி இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார். நுகர்வோர்க்கான கடனை நிதித்துறை கூட்டுச் செயலர் திரு.பி.நடேசன் இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு சட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில், காலஞ்சென்ற பழம் பெரும் கூட்டுறவாளர் திரு தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். பிறகு வங்கிக் கிளையைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நலிவுற்ற நிலையிலுள்ள மக்களுக்கு உதவவும், வட்டிக்கடை வைத்திருப்போரின் பிடியிலிருந்து அவர்களை மீட்பதற்கும், நலிவுற்ற பிரிவினருக்கு 150 கோடி ரூபாய்க்கு நகைக்கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கடன் பல்வேறு அமைப்புகளின் மூலம் மக்களுக்கு அளிக்கப்படும்.

"ஏழைகளையும், நலிவுற்ற பிரிவினைச் சேர்ந்தவர்களையும் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

''சென்னையில் சைக்கிள் ரிக்ஷாக்களைப் படிப்படியாக நீக்கி, இயந்திரம் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்களைக் கொண்டு வரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இயந்திரம் பொருத்தப்பட்ட இவ்வகையான சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்குவதற்கு ஐந்தாயிரம் ரூபாய் வரையில் செலவாகும். இதில் ஆயிரத்து இருநூற்றைம்பது ரூபாய் வரையில் மானியமாகவும், மீதியுள்ள தொகை குறைந்தளவு வட்டியுடன் கடனாகவும் அளிக்கப்படும். சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொண்டு பிழைப்பவர்களுக்குத் தான் இத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன. முதல் கட்டமாக சென்னையில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் ஆயிரம் பேருக்கு இந்த உதவி வழங்கப்படும்.

''சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 70 பட்டதாரிகளுக்கு உதவி செய்யப்பட்டு, அதற்காக ஏழு இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.''

இந்தச் சீர்மிகு விழாவில், துவக்கப்பட்ட கிளைக்கு வாழ்த்து தெரிவித்தும், மத்திய வங்கியின் பயனுள்ள பணிகள் குறித்தும் துணைப்பதிவாளர் திரு. ஆர். சண்முகம், இணைப் பதிவாளர் திரு எஸ்.டி. வைத்தியலிங்கம், கூடுதல் பதிவாளர் திரு பி. இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு இரெ. ஆறுமுகம், தலைமையாசிரியர் திரு. டி. ராமு ஆகியோர் பேசினார்கள்.

கிளை துவக்கத்திலேயே, ஒரு இலட்ச ரூபாய் வரை வைப்புத் தொகை வைக்கப்பட்டிருக்கிறது என்ற இனிய செய்தியும் விழாவில் தெரிவிக்கப்பட்டது.

*மனிதருக்குள் பேதத்தையும்,
அச்சத்தையும் மூட்டிவிடக்கூடிய
வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும்
சுதந்திரத்தின் பரம விரோதி*

— பேரறிஞர் அண்ணா

துவக்கத்தில் வங்கியின் தனி அலுவலர் திரு பெ. கன்னியப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் செயலாளர் திரு.பெ. தங்கராசு அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று, இருவேறு பகுதிகளில் நடந்த இரு வங்கிக் கிளைகளின் துவக்க விழாக்கள், சேமிப்பின் அவசியத்தை உணர்த்துவதாகவும், சுயவேலைவாய்ப்பில் ஈடுபட-சொந்தக் காலில் நிற்க ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாகவும் அமைந்தது என்றால், அது முற்றிலும் உண்மை!



# ஊராட்சி ஒன்றியங்களில் பாரதி விழா!

**வி. சுபாஷ்,**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வண்ணம் தமிழ் நாடெங்கும் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் பாரதியார் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்ததற்கிணங்க ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடைபெற்று வருகின்றது.

ஜூன் திங்கள் வரை கடந்த ஆறு மாதங்களில் தமிழ்நாட்டிலுள்ள 151 ஊராட்சி ஒன்றியங்களிலும், 24 நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடத்தப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டப்பட்ட 157 பள்ளி, மருத்துவமனைக் கட்டடங்களுக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## திருநெல்வேலி மாவட்டம்

**களக்காடு ஊராட்சி ஒன்றியம்:**

15.5.82 அன்று பாரதி நூற்றாண்டுவிழா நடத்தப்பட்டது. விழாவில் வழக்காடுமன்றம், பாரதி பற்றிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. பத்மனேரியில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டடத்திற்குப் பாரதிபெயர் சூட்டப்பட்டது. பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

**ஸ்ரீ வைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்:**

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 25.5.82 அன்று விழா செவ்வனே நடத்தப்பட்டது. புதுக்குடிக் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடத்திற்கு 'பாரதி நூற்றாண்டு நினைவுக்கட்டடம்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

**மேலநீலித நல்லூர் ஊராட்சி ஒன்றியம்:**

5.6.82 அன்று பெரியகோடிலான் குளத்தில் நடைபெற்றது. விழாவினையொட்டி அரிசன காலனிக் குடியிருப்பு வீடுகள் 20 கட்ட முடிவு மேற்கொள்ளப்பட்டது. வெள்ளகுளம், பன்னிருத்து, கீழநீலிதநல்லூர் கிராமங்களில் கட்டி முடிக்கப்பெற்ற கட்டடங்களுக்குப் பாரதியார் பெயர்சூட்டப்பெற்றது. மாணவ மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

## சேலம் மாவட்டம்

**நாமக்கல் நகராட்சி:**

13.6.82 அன்று நாமக்கல் நகராட்சியின் சார்பில் மகாகவி பாரதியார் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடுதிட்டக்குழு துணைத் தலைவர் திரு.மா. முத்துசாமி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் :**

இந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நைனாம்பட்டியில் 14.6.82 அன்று விழா நடத்தப்பெற்றது. ஆட்டையாம்பட்டி, ஆட்டையாம்பட்டி கிழக்கு, நைனாம்பட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கூடங்களுக்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்டாக்டர்கா.காளிமுத்து அவர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோவை மாவட்டம்

**பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்:**

1.5.82 அன்று விழா சீரிய முறையில் நடைபெற்றது. ரூ. 65,000 செலவில் கட்டி முடிக்கப்பட்ட பொங்கலூர் பள்ளிக் கட்டடத்திற்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பெற்றது.

**உடுமலை நகராட்சி ஒன்றியம் :**

இந்நகராட்சியில் 17.5.82 அன்று விழா நடைபெற்றது. ரூ. 70,000 செலவில் கட்டி முடிக்கப்பட்ட நகராட்சிக் கூடுதல் பள்ளிக் கட்டடத்திற்குப் பாரதி பெயரிடப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு அவர்கள், விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

## தென்னார்க்காடு மாவட்டம்

**கோலியனூர் ஊராட்சி ஒன்றியம்:**

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 26.5.82 அன்று விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திண்டிவனம் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் பாரதி படத்தைத் திறந்து வைத்தார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளோடு விழா இனிதே முடிவுற்றது.

**செஞ்சி ஊராட்சி ஒன்றியம் :**

26.6.82 அன்று விழாச் சிறப்பாக நடத்தப்பட்டது. மாணவ-மாணவியருக்காகக் கட்டுரை, பேச்சு, இசைப் போட்டிகள் நடத்தப்பட்டன. கிராமிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. விழாவில் 20 மகளிர்க்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. செஞ்சி பெண்கள் பள்ளி மாணவிகளால் 'பாஞ்சாலி சபதம்' கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

## பெரியார் மாவட்டம்

**கோபிச்செட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம் :**

21.5.82ல் விழா செவ்வனே கொண்டாடப்பட்டது. ரூபாய் 72,000- மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக்குப் பாரதியார் நூற்றாண்டு நினைவுக்கட்ட



டம் எனப் பெயர் சூட்டப்பட்டது. உடல்ஊனமுற்றோர்களுக்கு விளையாட்டுப்போட்டி நடத்தப்பட்டுப் பரிசு வழங்கப்பட்டது. விதவைகளின் புதல்விகளுக்குத் திருமணம் செய்ய அரசு மானியம் ரூ. 1000 வீதம் வழங்கப்பட்டது. தையல் இயந்திரங்கள் ஏழைப் பெண்களுக்கும், விதவைகளுக்கும் வழங்கப்பட்டன. பள்ளிக்குழந்தைகளுக்கு ஒரு மரம் வீதம் நடமரச்செடிகள் வழங்கப்பட்டன.

**பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்**

தொட்டம்பாளையத்தில் 31.5.82 அன்று விழாச் சிறப்புற நடைபெற்றது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொட்டம்பாளையம் கூடுதல் பள்ளிக்கட்டடத்திற்குப் பாரதி பெயர் சூட்டப்பட்டது. உடல் ஊனமுற்றோர்க்குவிளையாட்டுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளிச்சிறுவர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.

## வடார்க்காடு மாவட்டம்

**அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம்:**

14.5.82 அன்று விழா சிறப்புற நடத்தப்பட்டது. விழாவில் பட்டிமன்றம், சிறப்புச் சொற்பொழிவு ஆகியவை நடைபெற்றன. விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். பள்ளியாங்குப்பம் பள்ளிக்கட்டடம், வளர்புரம் அரிசனக்காலனி, பள்ளிக் கட்டடம், வளர்புரம் ஊரக மருந்தகம் ஆகிய கட்டடங்களுக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பட்டது.

**திமிரி ஊராட்சி ஒன்றியம்:**

21.5.82 வாழப்பந்தல் கிராமத்தில் சீரிய முறையில் விழா கொண்டாடப்பட்டது. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். வாழைப்பந்தல், மேல்புதுப்பாக்கம், வாழப்பந்தல் கிராம மருந்தகக் கட்டடம் ஆகியவற்றிற்கு அமரகவி பாரதியாரின் பெயர் சூட்டப்பெற்றது. மாணவ-மாணவியர்களுக்குப் பேச்சு, பாட்டு கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்று பாரதிப் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

## தஞ்சாவூர் மாவட்டம்

**பாபநாசம் ஊராட்சி ஒன்றியம்:**

2.6.82 அன்று பாரதி விழா நடத்தப்பட்டது. மாணவ-மாணவியருக்கு போட்டிகள் நடத்தப்பட்டு புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. துவக்கப்பள்ளிக்கட்டடத்திற்குத் தேசியக் கவி பாரதியாரின் பெயர் சூட்டப்பட்டது.

**வலங்கைமான் ஊராட்சி ஒன்றியம்:**

22.6.82 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். விழாவில் பட்டிமன்றமும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. விதவைத் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு ரூ.5000 சிறுசேமிப்புப்பத்திரமும், விதவை பெண்களின் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்களும், ஏழைப் பெண்களுக்கு இலவசத் தையல் இயந்திரங்களும்வழங்கப்பட்டன. சலவை மற்றும் முடிதிருத்துவோர்க்கு இலவச தொழில் கருவிகள் வழங்கப்பட்டன. கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள்வழங்கப்பட்டன.

## இராமநாதபுரம் மாவட்டம்

**கன்னங்குடி ஊராட்சி ஒன்றியம்:**

28.6.82 அன்று சிறப்பாக நடைபெற்றது. மாணவ-மாணவியருக்குக் கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி நடத்தப்பட்டன. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் நாடகமும் பட்டிமன்றமும் நடைபெற்றன.

**தேவகோட்டை நகராட்சி:**

13.6.82 அன்று பாரதி நூற்றாண்டு விழா நடத்தப்பெற்றது. விழாவினையொட்டி நடத்தப்பட்ட ஊர்வலத்தில் அழகுமிகு ஊர்தியும், 3,000 மாணவ-மாணவியரும் கலந்து கொண்டனர். விழாவில் 'இனியொருவிதி செய்வோம்' என்னும் தலைப்பில் கவியரங்கமும், அனைத்துக் கட்சி தலைவர்கள், நகரப்பிரமுகர்கள், சிறப்புரையும், தமிழ்ப் புலவர்கள் கலந்து கொண்ட பட்டிமன்றமும் நடைபெற்றன.

## மதுரை மாவட்டம்

**மேலூர் ஊராட்சி ஒன்றியம்:**

29.5.82 அன்று மேலூர் வடக்கு நாவினிப்பட்டியில் பாரதி விழா நடைபெற்றது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து உணவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட துணைச் சுகாதார நிலையத்திற்குப்பாரதிபெயர்சூட்டப்பட்டது. உடல் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

**வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம்:**

31.5.82 அன்று விழா கொண்டாடப்பட்டது. ராஜகோபாலபுரம் தொடக்கப்பள்ளிக்கு மகாகவி பாரதியார் பெயரிடப்பட்டது. பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்:**

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 26.6.82 அன்று பாரதி நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் நகரப்பிரமுகர்களும், தமிழறிஞர்களும் அரசு அலுவலர்களும் கலந்து கொண்டு பாரதியார் சீரிய கருத்துக்களை எடுத்துரைத்தனர். விழாவில் நல்வாழ்வுத் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

## கன்னியாகுமரி மாவட்டம்

**தக்கலை ஊராட்சி ஒன்றியம்:**

4.5.82 அன்று விழா நடத்தப்பட்டது. பாரதி பற்றிய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டன. அறிஞர் பெருமக்களும், அரசு அலுவலர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளுடன் விழா இனிது முடிவுற்றது.






# மகிழ்ந்தேன்.... வியந்தேன்!

தமிழரசு இரண்டாண்டுத் தொகுப்பு மலரைப் படித்து மகிழ்ந்தேன்... வியந்தேன். இலவசச் சத்துணவுத் திட்டம் பற்றிய மாண்புமிகு முதல்வரின்உரைத் தொகுப்பை இலவச இணைப்பாகத் தந்தது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

—ஆர். ராஜேந்திரன்
கருவலூர், கோவை.

**அரிய செய்திகள்**

'தமிழரசு' இரண்டாண்டுத் தொகுப்பு மலரில் பயன்தரத் தக்க பல அரிய செய்திகள் உள்ளன. குறிப்பாக, ஆசிரியர் சமுதாயத்துக்கு அரசு நல்கிய உதவிகளைப் பற்றிய கட்டுரை எங்களுக்குப் பயனுள்ளாக இருந்தது.

—ஆர்.ஜி. துரைராஜலு,
கீழப்பழுவூர்

**வண்ண முகப்பு**

இரண்டாண்டுப் பணிகள் தொகுப்பு மலரின் வண்ண முகப்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது.

—வி.பி. செல்வராஜ்,
கும்பகோணம்.

**ஆக்கப்பணிகள்**

இரண்டாண்டுப் பணிகளின் தொகுப்பு மலரைக்கண்டேன். அரசின் ஆக்கப்பணிகளை அது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

—வெ. சுப்பிரமணியன்,
போரூர், சென்னை-104

**அருமை**

''தமிழரசு'' 1.7.'82 இதழைக் கண்டேன். முகப்பில் தமிழக முதல்வரின் படம் மிகவும் அருமை!

—தி. இராமசாமி,
பூவிருந்தவல்லி, சென்னை-56

**நிறைந்த செய்திகள்**

குறைந்த விலையில், நிறைந்த செய்திகளையும் தகவல்களையும் தந்து என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டது தமிழரசு மலர்!

—எம். செல்வராஜ்,
திருவள்ளூர்.

**அரும்பெரும் பணிகள்**

தமிழக அரசு கடந்த ஈராண்டுகளில் செய்துள்ள அரும்பெரும் பணிகளைப் புரிந்து கொள்ள இம்மலர் வழிவகுக்கிறது.

—ராஜி,
சென்னை-83.

**பயனுள்ள கட்டுரை**

மலரில், 'கிராமப்புறங்களில் பேருந்து வசதி' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை பயனுள்ளதாக அமைந்துள்ளது.

—செல்லப்பன்,
அம்மாப்பேட்டை, சேலம்-3

**நல்வாய்ப்பு**

பல்வேறு துறைகளின் ஆக்கப்பணிகளை, ஒரு சேரப் பார்க்கின்ற நல்வாய்ப்பு கிடைத்தது எங்களுக்கு-தமிழரசு மலர் மூலமாக!

—டி. சுவாமிநாதன்,
பேரணாம்பட்டு

**முக்கிய செய்திகள்:**

ஜூலைத்16 இதழில் அட்டைப் படத்தில் குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். ஆகியவர்களின் படம் கண்ணைக் கவரும் வண்ணம் உள்ளது. ''பாலர்க்குப் பண்பட்ட கல்வி'' கட்டுரையில் முக்கியச் செய்திகள் தொகுத்திருக்கிறீர்கள்.

— ராஜூ
சென்னை-17

**மருத்துவக் கட்டுரைகள்:**

''சமுதாயப் பல் மருத்துவத் தொண்டு'' சிறுவர் முதல் பெரியோர் வரை படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டுரை ஆகும். இதுபோன்ற மருத்துவக் கட்டுரைகள் தொடர்ந்து வெளியிடவும்.

தியாகச்சுடர் காமராஜ் பற்றிய கட்டுரை படித்தேன். நெஞ்சம் நெகிழ்ந்தது.

—டி. வசந்தா
கீழப்பழுவூர்.

**மாணவர் பக்கம்**

ஒவ்வொரு இதழிலும் அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் அருமையாக இருக்கின்றன.

முதல்வரும்-புதிய குடியரசுத் தலைவரும் இணைந்த இரு வண்ண அட்டைப்படம் அருமை. ''மாணவர் பக்கம்'' சிந்தையைக் கவரும்படி சிறப்பாக வருகிறது. தமிழக அரசின் சிறப்பான திட்டப் பணிகளை விளக்குகிறது தமிழரசு!

—ச. புகழேந்தி
திருவையாறு.

**வெண்பாப் போட்டி**

முன்பெல்லாம் 'தமிழரசில்' வெண்பாப் போட்டி வந்தது. அதைப்போல் மீண்டும் தொடர்ந்தால் தமிழ் நெஞ்சங்கள் களிப்படையும்.

—நாகை மனோகரன்
செங்கல்பட்டு.

தமிழரசில் தமிழ்க் கவிதைகள் தவறாமல் இடம்பெறவேண்டும்.

—ஆ. மாரியப்பன்
புதுக்கோட்டை-1.




# மக்களின் குறை கேட்கும் நாள்!

சீர்த்திமிகு சென்னை மாநகராட்சி பற்றிய சில விஷயங்கள் நாம் அறிந்து கொள்ளத்தக்கவைகளாகும்.

சென்னை மாநகராட்சி 150 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மக்கட்தொகை 35 இலட்சம். நாள்தோறும் வந்து செல்வோர் எண்ணிக்கை மட்டும் 10 இலட்சமாகும்.

வட்டந்தோறும் சென்று, அவ்வப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து — விளக்கின்மை குப்பை சேரல் போன்ற சாதாரண குறைபாடுகள் உடனே நீக்கப்படுவதற்கும். சாலை வசதியின்மை, பள்ளி வசதியின்மை போன்ற குறைகளை நீக்க அவ்வத்துறைகள் விரைவில் நடவடிக்கைகள் மேறகொள்வதற்குமான நல்வாய்ப்புகளை உருவாக்கி வருகிறார் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு.

## ஓராண்டு நிகழ்ச்சிகள்

இந்த ஓராண்டில் மட்டும்— சென்னை மாநகரின் 12 வட்டங்களில் மக்கள் குறைகேட்கும்நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டுவிட்டது.

கடந்த பிப்ரவரி மாதத்தில்— 119வது வட்டத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 53 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. 6-வது வட்டம் காசிமேடு பகுதியில் நடைபெற்ற மக்கள் குறைகேட்கும் நாளன்று 48 மனுக்கள் ஏற்கப்பட்டன. 87-வது வட்ட நிகழ்ச்சியில் 43 விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. 41-வது வட்டத்தில் 89 கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டன. 140-வது வட்டத்தில் 75 விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. 63-வ்து வட்டத்தில் 18 மனுக்கள் ஏற்கப்பட்டன. 32-வது வட்டத்தில் 73 கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டன.

மார்ச்சு மாதத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு பங்கேற்ற மக்கள் குறைகேட்கும் நாள் நிகழ்ச்சி 141-வது வட்டத்திலிருந்து 145வது வட்டம்வரை இணைத்து நடத்தப்பட்டபோது 315 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதலாவது வட்டத்திலிருந்து 5-வது வட்டம் வரை இணைத்துப் பார்வையிடப்பட்ட போது 53 கோரிக்கை மனுக்களும், 121-வது வட்டம் முதல் 125-வது வட்டம் வ்ரை சேர்ந்தாற்போல் ஒரே நாளில் கவனிக்கப்பட்டபோது 91 மனுக்களும் அளிக்கப்பட்டன.

மே மாதத்தில் 15 யூனிட்டுகள், 71 முதல் 75 வரையான வட்டங்களில் மக்கள் குறைகள் கேட்டறியப்பட்ட போது 42 மனுக்கள் பெறப்பட்டன.

ஜூலை மாதத்தில் 111 முதல் 115 வரையிலான வட்டங்கள் இணைத்துப் பார்வையிடப்பட்ட போது 79 கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன.

## குறைகள் நீக்கம்

ஆக மொத்தத்தில் இவ்வாறு 12 வட்டங்களில் நடத்தப்பட்ட மக்கள் குறைகேட்கும் நாளில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் தரப்பட்ட கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை மட்டும் 979 ஆகும். ஆனால், அம்மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகளின் எண்ணிக்கையோ ஏறத்தாழ இரண்டாயிரம்.

''அவற்றில் முக்கால்வாசி குறைகள் நிவர்த்திக்கப்பட்டுவிட்டன; மீதமுள்ளவற்றை மிகவிரைவில் செம்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' என்றார் மாநகராட்சி மக்கள் தொடர்பு அதிகாரி திரு. நி. வே. பாலு.

16-7-82 அன்று, வடசென்னை பகுதியிலுள்ள 5-வது வட்டத்தில் மக்கள் குறை கேட்கப்பட்டது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால்.

13-வது கட்டமாக நடத்தப்பெற்ற இந்த மக்கள் குறைகேட்கும் நாள் நிகழ்ச்சியில் மாநகராட்சி தனி அலுவலர் திரு டி. டி. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. ஆணையர் திரு. எஸ். ஆர்தருப்பண்ணன், இ. ஆ. ப. முதலான பல்வேறு துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான ஆண்களும், பெண்களும் தங்கள் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சரிடம் தெரிவிக்கத் திரண்டிருந்த அக்கூட்டம், ராயபுரம் ராபின்சன் பூங்கா விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

## அதிகாரிகள் பேச்சு

வரவேற்புரையாற்றிய தனி அலுவலர் அவர்கள் ''இப்பகுதியில் உள்ள 31 சாலைகள் விரைவிலேயே 13 இலட்சம் ரூபாய் செலவில் செப்பனிடப்படவிருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

**இல. இராசேந்திரன்**

மாநகராட்சி ஆணையர் அவர்கள் உரையாற்றுகையில்- ''மாநகராட்சி அதிகாரிகள் மூல மாகவும், மெட்ரோ அதிகாரிகள் மூலமாகவும் நடத்தப்படும் குறைகேட்கும் இந்நாளை, மக்கள் எல்லாம் நல்ல முறையிலே பயன் படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றார்.

இதன் பின்னர்—

கூடியிருந்த மக்களெல்லாம் தங்கள் குறைகளை வரிசையுற நின்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுக்கள் மூலம் அளித்தனர். ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து, அவற்றில் இல்லாத விவரங்கள் பற்றி அவர வரிடமே கேட்டறிந்து, குறிப் பிட்ட அதிகாரியிடம் அங்கேயே தந்து கவனித்திட ஏற்பாடு செய் தார் மாண்புமிகு அமைச்சர்.



மாநகராட்சி மக்கள் குறைகேட்கும் நாளில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

## அமைச்சர் உரை

அதற்குப் பின்னாலே மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச் சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் பேசுகையில் குறிப் பிட்டதாவது:

''இன்றைய தினம் இங்கே 115 மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மக்கள் 400 குறைகளைத் தெரிவித்திருக் கிறார்கள். எங்களுக்கு அதிக மாக வரிபோட்டு விட்டீர்களே என்ற குறை யாராலும் குறிப் பிடப்படவில்லை. இதிலிருந்தே சென்னை மாநகராட்சியின் நிர் வாகச் சிறப்பினை நாம் அறிய லாம்.

''இப்பகுதியில் தண்ணீர்ப் பிரச்னை இருப்பதாகவும், சில இடங்களில் குடிநீரில் சாக்கடைத் தண்ணீர் கலந்து விடுவதாகவும் இரண்டொரு மனுக்களில் கூறப் பட்டுள்ளன. இதுபற்றி உட னேயே தீவிர நடவடிக்கை மேற் கொள்ளப்படும். இந்தப் பகுதி யில் உள்ள மாநகராட்சிப்பள்ளி யின் இறுதி வகுப்பில் படித்த 86 பேரில் 6 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றிருப்பதாகக் கூறியிருக் கிறார்கள். கல்வி அதிகாரி மூலம் இது குறித்தும் கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும்.

''111 முதல் 118 வட்டங்கள் அடங்கிய இப்பகுதியில் 81-82ல் மட்டும் பல்வேறு பணிகளுக்காக ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். கணக்கு முக்கியமல்ல; நீக்கப் பட வேண்டிய குறைகளின் கணக்குத் தீர்க்கப்பட வேண்டும்; அதுதான் முக்கியம்.

## தன்னிறைவுத் திட்டம்

''ராபின்சன் பூங்காவை யொட்டி விரைவில் ஒரு ஸ்டேடி யம் கட்டப்படும்.

''இவ்வாறான பல்வேறுகுறை களையும் நீக்க, மாநகராட்சிகள் அளவிலும் தன்னிறைவுத் திட் டத்தைக் கொண்டு வர மாண்பு மிகு முதல்வர் அவர்கள் திட்ட மிட்டு வருகிறார்கள்''.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இறுதியாக-கோரிக்கைமனுக்கள் பற்றி அவ்வத் துறையின் அதி காரிகள் ஆக்கப்பூர்வமான தங்கள் பதில்களை மக்கள் முன் தெரி வித்தனர்.

# தமிழகம் கேரளத்திற்கு வழங்கும் பேருந்துக் கூடுகள்

கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் சென்னையில், தமிழகப் போக்குவரத் துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, கேரள அரசுப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு கே. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் உயர்மட்ட அலுவலர்கட்கும், தமிழகப் போக்கு வரத்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர் களுக்கும் இடையில் (13—7—1982) பேச்சு வார்த்தை நடந்தது. இதன் பயனாக, திருவள் ளுவர் போக்குவரத்துக் கழகம் 20 பேருந்துக் கூடுகளையும், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 20 பேருந்துக் கூடுகளையும், கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகம்10 பேருந்துக் கூடுகளையும் கேரள மாநில சாலைப் போக்கு வரத்துக் கழகத்திற்கென மாதா மாதம் கட் டிக்கொடுக்கும். சாதாரண பேருந்திற்கு ரூ. 90,000 நடுத்தர சொகுசுப் பேருந்திற்கு ரூ. 1,40,000. சொகுசுப் பேருந்திற்கு ரூ. 1,92,000 செலவாகும்.

# Today's Rs. 7,448-
# Gets you Rs. 20,000-*

## YES – IT'S POSSIBLE

Canara Bank's new PLATINUM JUBILEE CASH CERTIFICATE SCHEME multiplies your money to nearly three times its value.

**Make time work at building you a fortune. Invest in Canara Bank's PLATINUM JUBILEE CASH CERTIFICATES, and get back almost thrice the money you deposit in TEN years.**

**Choose from several cash certificates with different maturity values ranging from Rs 100/- onwards. And, remember, sooner you decide and invest, sooner will be your encashment.**

*Our other Special Deposit Schemes are:*

* **VIDYA NIDHI DEPOSIT**
* **BALAKSHEMA DEPOSIT**
* **KAMADHENU DEPOSIT**
* **NIRANTARA DEPOSIT**

*"For further details please contact our nearest Branch"*

* Subject to revision as per the Reserve Bank of India Regulations*

**CANARA BANK**

(A Nationalised Bank)

HO: Bangalore-560002.

**Over 1350 branches all over India**



# கொல்லிமலைப் பகுதியில் துள்ளிவரும் புதுவாழ்வு

தமிழ்நாடு அரசின் சார்பில் 'வல்வில் ஓரி' விழா இந்த ஆண்டும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது. கொல்லிமலைப் பகுதிகள் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தன. எத்திசை நோக்கினும் 'ஓரி'யின் சிறப்புகளை விளக்கிடும் வகையில் பதாகைகளும் சுவரொட்டிகளும் காணப்பட்டன. நகரம் எழிற்கோலம் பூண்டு, விழாக் கோலமாக விளங்கியது. சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியைச் சேர்ந்த ''செம்மேடு'' கிராமத்தில் கடந்த 2.8.82, 3.8.82 ஆகிய இருநாட்களில் விழாக் கொண்டாடப்பட்டது. ஒரு மாநாடு நடப்பது போன்ற சிறப்பு இருந்தது. செம்மேடு வல்வில் ஓரி திடலில் முதல் நாள் (2.8.82) காலையில் சேந்தமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் சீருடை அணிந்த ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் வல்வில் ஓரி சிலைக்கு வீர வணக்கம் செலுத்தினார்கள். மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் திரு. க.இராசாராம் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்றார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா கோலாகலமாகத் தொடங்கியது. சேலம் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு. பால்ராஜ் வரவேற்புரையாற்றினார். சேலம் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப. செல்வம் ,இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில், ''மலைவாழ் மக்களாகிய உங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் உள்ள அரசு, மேம்பாட்டிற்கான பல முனைப்புத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

விழாவினைத் துவக்கி வைத்தும், கண்காட்சியைத் திறந்து வைத்தும் பேசிய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''இப்பகுதி மக்கள் இன்னமும் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதிலும் கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. அக்கறை காட்டவில்லை. 100க்கு 13 சதவிகிதம் குழந்தைகள் தான் கல்வியில் அறிவுடையவர்களாக இருப்பதாக இங்குள்ள புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட நிலைமையினை இனி மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பல்வேறு பயனுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை உங்களுக்காக உருவாக்கி வருகிறது.

''தமிழக அரசைப் பொறுத்தவரையில் உங்களுக்காகப் பல்வேறு விதமான கடன்களை

நிகழ்ச்சித்தொகுப்பு **ஜி. ஆனந்தன்**

யும் மானியங்களையும் அளித்து வருகிறது. இந்த வசதிகளை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். கொல்லிமலையிலுள்ள 16 நாடுகளையும் இணைப்பதற்கும், புதிய சாலைகளைப் போடுவதற்கும், தடுப்புச்சுவர்கள் கட்டுவதற்கும், சிறுபாலங்கள் அமைப்பதற்கும், புதிதாகப் பள்ளிகள் கட்டுவதற்கும், குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்காகவும் பலகோடி ரூபாய் ஒதுக்கி அரசு உதவி செய்து வருகிறது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் மலைவாழ் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கினார்.



''மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த சத்துணவுத் திட்டத்திற்காக இங்கே உள்ள மலைவாழ் மக்களில் 100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. பழமையை மட்டுமே பேசிக் கலையும் விழாவாக இந்த வல்வில் ஓரி விழாவை அரசு கருதவில்லை. மற்ற மக்களைப் போல மலைவாழ் மக்களும் அனைத்து முன்னேற்றங்களையும் அடைய வேண்டும் என்ற உயர் நோக்குடன் இவ்வரசு காரியமாற்றி விழா எடுத்து வருகிறது. எந்த அரசும் மலைவாழ் மக்களுக்குச் செய்யாத உதவிகளை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு இன்று செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.''

காலையில் நடைபெற்ற வல்வில் ஓரி விழாவில் சேந்தமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.சிவப்பிரகாசம், மாவட்டக் கல்வி அலுவலர், திரு. குலசேகரன், நாமக்கல் கோட்டாட்சித் தலைவர் திரு. ராமன், சேலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயராமன், சேலம் திரு சாக்ரடீஸ் ஆகியோர் உரையாற்றினார்கள். நாமக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. ஜெய செல்வராயன் நன்றி கூறினார்.

ஆரம்பத்தில் கொல்லிமலையில் தமிழ் நாடு அரசின் பல்வேறு துறைகளால் அமைக்கப்பட்ட கண்காட்சியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாலையில் நடைபெற்ற கவியரங்க விழாவில் 'வல்வில் ஓரியின் வளர் புகழ்' பற்றிக் கவிஞர் திரு. நாமக்கல் நாதன், கவிஞர் திரு. செந்தமிழ்மாறன், கவிஞர் திரு. செ. ஆடலரசு ஆகியோர் பங்கேற்றுக் கவிமழை பொழிந்தனர்.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் (3.8.82) காலை நிகழ்ச்சி புதிய பொலிவுடன் களைகட்டியது. அதிர்வேட்டு முழக்கத்துடன் விழா ஆரம்பமானது. விழாவிற்குச் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா .வரதராஜுலு இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில், "மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள சத்துணவுத் திட்டமும் இப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2 வயது முதல் 10 வயதுள்ள குழந்தைகள் உடல் வளமும் மனவளமும் பெறவேண்டும் என்ற உயர் நோக்குடன் இந்தச் சத்துணவுத் திட்டம் முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டதாகும். மக்கள் ஆதரவு இருந்தால்தான் அரசு தீட்டும் எந்தத் திட்டமும் வெற்றி பெற முடியும். சத்துணவு போன்ற நல்ல திட்டங்களுக்கு மக்கள் தாராளமான முறையில் நன்கொடைகள் வழங்கலாம்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், பங்கேற்ற சேலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.ஆறுமுகம் பேசுகையில், ''தமிழக அரசு மறைந்த தலைவர்களுக்கும் பாரதியார், பாரதிதாசன் உள்ளிட்ட பல்வேறு அறிஞர் பெருமக்களுக்கும் விழா எடுத்து சிறப்பித்து வருகிறது. அந்த வரிசையில் ஓரிக்கு விழா எடுப்பது மிகவும் சாலப்பொருந்தமானது. இறந்தும் இறவாப் புகழ் அடைந்துள்ள கடையெழு வள்ளல்களில் ஒருவரான



கண்காட்சியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார்.

ஓரிக்கு விழா எடுப்பது போல் மற்ற வள்ளல்களுக்கும் அரசு விழா எடுத்து அவர்களைச் சிறப்பிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. இரா.அருணாசலம் அவர்கள் பேசுகையில், ''முதல்வர் புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையில் ஆன அரசு வந்த பிறகுதான் கொல்லிமலை மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.'' என்றார்.

தோட்டக்கலைத் துணை இயக்குநர் திரு. ராமன் பேசுகையில், "பேரறிஞர் அண்ணா வழியில் ஆட்சி செய்யும் இந்த அரசு ஆதிவாசிகளுக்கு நல்ல பல திட்டங்களைச்செயல்படுத்துகிறது'' என்றார்.

சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவப்பிரகாசம் பேசுகையில்,"இப்பகுதி வாழ்மக்கள் நல் வாழ்வில் இந்த அரசு அதிக அக்கறை எடுத்து வருகிறது. புதிய புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பொருளாதார மேம்பாட்டை உயர்த்துவதற்காக ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தினையும், தன்னிறைவுத் திட்டத்தையும், சத்துணவுத் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் விழாவில் பங்கு பெற்று, ''கால்நடை மருத்துவமனை அலுவலர்கள் குடியிருப்புக் கட்டிடத்திற்கும், ''கொல்லிமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலர்கள் குடியிருப்புக் கட்டிடத்திற்கும்'' காவல் நிலையக் கட்டிடத்திற்கும் கால்கோள் நாட்டினார்.

பல்வேறு நல உதவிகளும், பல்வேறு வீர விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார். அவர் தம் உரையில் கூறிய கருத்துக்கள்:

"மாபெரும் வள்ளலாகவும் வீரனாகவும் மகத்தான சரித்திரம் படைத்து வாழ்ந்த- அரசாண்ட அந்தமாவீரன் ஓரியின் விழா இது.

"கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்கு கொல்லிமலைப் பகுதியிலும், மற்றொரு வள்ளலான பாரிக்கு முகவை மாவட்டத்திலும் இப்போது விழாக்கள் எடுக்கப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இப்படிப்பட்ட கடையெழு வள்ளல்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பெருந் திறமை வாய்ந்தவர்களாகவும், அவர்கள் தங்கள் இதயத்தில் ஈரமும் கொண்டவர்களாகவும் வள்ளல்தன்மை மிக்கவர்களாகவும், வீரமிக்கவர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள்.

"சாதாரண இடங்களில் வாழும் மக்களுக்கும் மலைப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும் எத்தனையோ வழிகளில் வித்தியாசங்கள், வேறுபாடுகள் இருக்கின்றன. ஓரி வனவிலங்குகளை எதிர்த்து வாழ்ந்து வந்திருக்கிறார் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. அம்பு எய்வதில் கம்ப இராமாயணத்தில் இராமனும் மகாபாரதத்தில் அர்ச்சுனனும் தீரர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். இராமன் விட்ட பாணம் (அம்பு) ஏழு மரங்களை துளைத்துச் சென்றதாகப் புராண வரலாறு கூறுகிறது. அவர்களது வீரதீரச் செயல்களைக் குறிப்பிடுவதுபோல், வல்வில் ஓரியை, இலக்கியத்தில் அவனின் வீரத்தைப் புகழ்ந்துள்ளார்கள். வில் ஆற்றல் மிக்க ஓரி எய்த அம்பு யானை, புலி, மான், பன்றி, உடும்பு ஆகிய ஐந்து விலங்குகளையும் மாய்த்ததாக வரலாறு கூறுகிறது. இப்படி இலக்கியத்தில் இருந்ததா அல்லது கற்பனைதானா என்று எதுவாக இருந்தாலும் அத்தனை சிறப்புகளுக்கும் உரிய வீர மன்னனாக வாழ்ந்தவன் தான் ஓரி மன்னன்என்பதை நமக்கு உணர்த்துகிறது. கொல்லி மலைப்பகுதி மக்கள் 4000 அடி உயரத்திலுள்ள மலைப் பிரதேசத்தில் வாழ்கிறார்கள்.

"மலைவாழ் மக்களுக்காக இந்த அரசு வந்த பிறகுதான் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்தி வருகிறது. 50 இலட்ச ரூபாய் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக இந்த ஆண்டில்ஒதுக்கப்பட்டுள்ளது. கொல்லிமலைப் பகுதியை மேம்பாடு செய்ய மத்திய அரசின் ஒத்துழைப்புடன் மாநில அரசு 7 கோடி ரூபாய்க்கான திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது. இந்த மக்கள் நல்வாழ்வில் யாருக்குமில்லாத அக்கறை புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையிலுள்ள அரசுக்கு மட்டும் இருந்துவருகிறது. 25 ஆயிரம் மக்கள் தொகையுள்ள இந்தப் பகுதிமக்களுக்கு எல்லாம்இன்றைக்குப்புதுவாழ்வு பிறந்திருக்கிறது. கொல்லிமலை போன்ற மலைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளைக் கூடப் பெற முடியாமல் வாழ்ந்து வருகிறீர்கள். 2 கோடி ரூபாய் செலவில் சாலை போடும் திட்டத்தையும் 61 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்துச் சாலை, தொடர் சாலை அமைப்பதற்கும் அரசு முனைப்புடன் கடந்த ஆண்டு முதல் காரியங்கள் ஆற்றி வருகிறது.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் ஆதிவாசியைச் சேர்ந்த ஏழை ஒருவருக்கு நிலப்பட்டா வழங்கினார்.**



"மத்திய அரசின் துணையுடனும் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தன்னிறைவுத் திட்டத்திற்காக 1½ கோடி ரூபாய் கொல்லி மலைப் பகுதிக்கு மட்டும் ஒதுக்கியிருக்கிறது. நமது அரசும் மத்திய அரசும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 50½ இலட்சம் ரூபாயை ஒதுக்கிச் செயல்படுத்த இருக்கின்றன. இந்த ஆண்டில் தான் கொல்லிமலைப் பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்வதற்கென ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வெளியிலுள்ள நகரத்துடன் தொடர்பு கொள்ள முடியாத அளவிற்கு இந்த மலைப் பகுதிக்கு வரும் பாதையில் 70 கொண்டை ஊசி வளைவுகள் இருக்கின்றன. இந்த வளைவுகளை நெடுஞ்சாலைத் துறை மூலமாகக் குறைப்பதற்கு 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டச் சுற்றுலாத் தலமாக இந்தக் கொல்லிமலையைத் தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் இணைத்துள்ளது. அறப்பளீசுவரர் ஆலயம் இந்தப்பகுதியில் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

"இந்தப் பகுதியிலுள்ள தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகள் தியாக உணர்வுடன் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். அதுதான் இந்த மலைவாழ் மக்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு. நாமெல்லாம் பெற்றுக் கொண்டிருக்கிற அத்தகைய வசதிகளை-நமக்கெல்லாம் பெருமை சேர்த்த இந்தத் தொகுதி மக்களுக்காக உடல் உழைப்பை நல்கியாவது திட்டங்களை நிறைவேற்ற அனைத்துத் தரப்பட்ட அதிகாரிகளும் ஒன்றுபட்டுக் செயல்படும்படி கேட்டுக் கொள்கிறேன்."

மாலையில் பட்டி மன்றம் நடைபெற்றது. ஓரியின் புகழ் பாரெல்லாம் பரவக்காரணம் அவனது "வீரச்செறிவா? கொடைச்சிறப்பா?" என்ற தலைப்பில் புலவர் திரு. சு. அண்ணாமலை, புலவர். பழ. மகாலிங்கம், புலவர். ஆர். பார்வதி அம்மையார், புலவர் க. திருநாவுக்கரசு, புலவர். கு.ப. பூங்குன்றன். புலவர். அன்னம்மாள் ஆகியோர் பங்குகொண்டு சிறப்பித்தனர். பின்னர் கலை நிகழ்ச்சியும், இரவு தமிழ்த்திரைப்படமும் நடைபெற்றன.

சேலம் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மு. பால்ராஜ் நன்றி கூறினார்.

**இருள்சூழ்ந்து கிடந்த மலை வாழ் மக்களின் வாழ்வில் புதிய ஒளிவிளக்கு ஏற்றப்பட்டுவிட்டது என்ற வகையில் "வல்வில் ஓரி விழா" அமைந்திருந்தது என்றால் அது மிகையாகாது.**

# பார்வதி வாழ்த்தினாள்

லக்ஷ்மி



முடக்கன்சாலை நிறுத்தத்தில் பஸ்ஸிலிருந்து சீதா இறங்கினாள். பக்கத்து டவுனிலிருந்து அவள் வாங்கி வந்த பாரதியார் கவிதைகள் என்ற புத்தகங்களும், எதிர்வீட்டுப் பாட்டி பார்வதிக்கு வாங்கி வந்த இருமல் மருந்தும் கொண்ட துணிப்பையைத் தூக்கிப் பிடித்தபடி மெல்ல நடந்தாள். முடக்கன் சாலையில் நீண்டகாலமாக உயர்ந்து-பரந்து-விரிந்து-விழுதுகளைப் பாய்ச்சி வேரூன்றிக் கொண்டு நிற்கும் அந்தப் பெரிய ஆலமரம் அவளை எப்பொழுதும் வியப்பில் ஆழ்த்துவது வழக்கம். மீனின் கருவை விட சிறிய விதையினின்று தோன்றிய மரம் - ''அண்ணல் யானை அண் தேர்ப் புரவி ஆட் பெரும் படையோடு மன்னர்க்கிருக்க நிழலாகும்மே!'' பள்ளிக்கூடத்தில் எப்பொழுதோ படித்ததை— நினைத்தபடி அவள் சாலையினின்று ஊருக்குள் செல்லும் பாதைப் பக்கம் திரும்பியபோது மலைத்துப்போய்நின்றுவிட்டாள் அன்று மன்னர்களது படைகளுக்கு நிழல் தந்து உதவிய மரம் இன்று சாலையைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளுக்குத் தங்கி இளப்பாற இடம் தந்துவிட்டிருந்தது. மரத்தடியில் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகப் பலர் உட்கார்ந்து அந்த அந்தி நேரத்தில் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

அன்று மன்னர்களுக்கு நிழல் தந்தது இம்மரம் - இன்று உழைப்பாளிகளான இந்நாட்டு மன்னர்களுக்கு இடம் தந்து உதவுகிறது. மரம் தன் பணியைச் செவ்வனே செய்கிறது - மனிதர்களான நாம் என்ன செய்கிறோம். எண்ணிய—படி அவள் அந்தப் பச்சை சேலைக்காரியை உன்னிப்பாகப் பார்த்தாள். அத்தனைப் பேர்களையும் தாண்டி ஏனோ அவள் மீது ஈர்ப்பு? பகல் பொழுது பஸ்ஸிற்காக சீதா காத்திருந்த போதே பார்த்தாள். அந்தப் பச்சை சேலைக்காரி தலைமீது ஒரு பெரிய இரும்புச் சட்டியில் கருங்கல் ஜல்லி கற்கள் குவியலைச் சுமந்து கொண்டு,, கவலை கப்பி முகத்துடன்.., தாரையும் கற்களையும் கலவை செய்ய பெருத்த ஓசையுடன் உருண்டு கொண்டிருந்த அந்த அசுர யந்திரத்தருகே சென்று கொட்டி விட்டுவந்தாள். மீண்டும் ஒரு பெரும் சுமையைத் தூக்கிச் சென்று வந்தாள். பஸ்ஸுக்காக காத்திருந்த அந்தச் சிறு பொழுதில் பச்சை சேலைக்காரி.. பத்து தடவை யாவது பெரும் சுமையாக ஜல்லி கல்லைத் தூக்கிப் போயிருப்பாள்.

நிழலோடு வீட்டில் தங்கி ஒரு குடும்பத் தலைவியாகக் குழந்தைகளைப் பத்திரமாகப் பாதுகாத்து வளர்க்க வேண்டிய ஒரு தாய்.. இப்படிச் சுமை தூக்க வந்திருந்தால் காரணம் இல்லாமலிருக்குமா.. வழி நெடுகிலும் அவளைப் பற்றிச் சிந்தித்துக் கொண் சீதா மரத்தடியில் ஒரு ஒதுக்குப்புறமாக மூன்றுகல் கூட்டிய அடுப்பிலே சமைத்த சோற்றைக் கிண்டிக்கொண்டிருந்தவளிடம் நெருங்கினாள். பச்சை சேலைக்காரி, அடுப்பிலே வெந்து கொண்டிருந்த சோற்றை அவசரமாக ஒரு அலுமினியப் பாத்திரத்தில் கவிழ்த்து, அதன் மீது புளித் தண்ணி போன்றதொரு திரவத்தை ஊற்றி.. அகப்பையில் சுழற்றிக் கிளறிவிட்டு.. வயல் பக்கம் திரும்பி, ''ஏ ராசாத்தி - கந்தா..வளர்மதி.. எல்லாம் ஓடியாங்கோ! சோறு துண்ண நேரமாச்சி'' ஓங்கிக் குரல் கொடுத்தாள். கூடை ஒன்றில் கிள்ளி வைத்திருந்த ஆல இலைகளைத் தரையில் பரப்பி தயாராக்கிவிட்டு நிமிர்ந்தாள்.

''என்னம்மா பாக்கிறீங்க... நீங்களும் உட்காருங்க.. எங்களோட ஒருவாய் சாப்பிடுவீங்க.'' வெற்றிலைகாவியில் பளிச்சிட்ட பற்கள் தெரிய சிரித்தாள்.

இரண்டு வயது-மூன்று வயது - நான்கு வயதுக்குள் படிகள் போல மூன்று குழந்தைகள்.. அரையில் மட்டும் கந்தல் உடையுடன் மூக்கில் ஒழுகிய சளியும், பரட்டைத் தலையும், முழங்கால் வரை புழுதியுமாக ஓடிவந்தனர். இலைக்கு முன் உட்கார்ந்த குழந்தைகளுக்குஆளுக்கு இரண்டு கரண்டியளவு சோற்றை அளந்து வட்டித்தாள் தாய்.



நம்ப ஊரில் அரசு ஆரம்பிச்சு வச்சிருக்கிற கிராமநல நிலையத்திலே செய்வாங்க. இந்த மூனு பேரையும் அதுலே சேர்த்துடு. செய்வியா?''..சீதா கொஞ்சம் கடுமையாகவே அதட்டிக் கேட்டாள்.

''அங்கே சேர்த்தா அதுகளை அங்கே யார் கவனிப்பா?''

''நல்ல கேள்வி..அங்கே குழந்தைகளை இந்த வயதில் கருத்தாக கவனித்து பராமரிக்க பால சேவிகா பயிற்சி பெற்ற பெண்கள் அரசால் அமர்த்தப்பட்டிருக்காங்க. குழந்தைகளைக் குளிப்பாட்டி சீருடை கொடுத்து-சுத்தமாக வைத்து கதை சொல்லி.. பாட்டு-படிப்பு கத்துக்க உதவுவாங்க..சுமார் நூறு குழந்தைகள் போல அதில் சேர்த்துக்கிறாங்க..ஆயாக்கள் வேறே வேலை பார்ப்பதால் குழந்தைகள் கீழே விழுந்து காயம் செய்துக்காம காப்பாத்த முடிகிறது''

''இவ்வளவுதானா நீ குழந்தைகளுக்குக் கொடுக்கிற சாப்பாடு?'' திகைப்புடன் கேட்டாள் சீதா.. அவள் பல ஆண்டுகள் ஒரு மருத்துவமனையில் நர்ஸாகப் பணி புரிந்துவிட்டு.. ஓய்வடைந்துவிட்டிருக்கிறவள். ஒழிந்த நேரம் ஊருக்கு உபகாரியாக இருக்க நினைக்கும் சேவை மனம் படைத்தவள். ''என் ஊட்டுக்காரர் மாமியார் - மாமனார்.. இந்தக் குழந்தைகள்-நான்.. இத்தனைப் பேரும் சாப்பிடனும். துண்மணி வாங்கக் கொஞ்சம் காசு ஒதுக்கி வைக்கணும். கிடைக்கிற கூலியிலே அரிசி வாங்கி... சோறாக்கி ..புளித்தண்ணியிலே காஞ்ச மிளகாய் ரெண்டைப் போட்டு.. ஒரு பிடிச்ச பிடிச்ச பிடி கீரையைக் கிள்ளி போட்டு குழம்பாக்கிப் படைக்கிறேன். இதுக்குமேலே எங்களுக்குக் கட்டுபடியாகாது. அதுவும் பொழுது அமரும் முன்னாடி ஒரு வேளை சோறு எங்க எல்லாருக்கும் கிடைக்குது - இது பத்தாதா?'' சிரித்தாள் அந்த ஏழைத்தாய்!

''காலையிலிருந்துகுழந்தைகள் பட்டினியாவா இருக்காங்க?''

''ஒருவேளை சோறு தரனே அது பத்தாதா?''

''உன் பேர் என்ன... எந்த ஊர் நீ'' அவசரமாகக் கேட்டாள் சீதா.

''இந்தவரதம்பட்டிதான் எங்க ஊர்.. என் பேர் பாஞ்சாலி.. ஏம்மா கேட்கறே?''

''அட நீ நம்ப ஊர்க்காரி.. இங்கே வந்து வேலை செய்யறே.. குழந்தைகளை யார் பாத்துக்கிறா?''

''ரோடு வேலை கிடைச்சுது-உடக்கூடாதுன்னுகுடும்பத்தோட இங்கேயே வந்துட்டோம்.ரெண்டு மாசமா ஆலமரத்தடியிலேதான் எல்லோரும் படுத்துத் தூங்கறோம் - குழந்தைங்க வயக்காட்டிலே பொழுதனிக்கும் விளையாடிக்கிட்டிருப்பாங்க..''

''நம்ப ஊர்லே சத்து உண்வுத் திட்டத்தை ஆரம்பிச்சிருக்காங்களே அதுபத்தி உனக்கு ஒண்ணுங் தெரியாதுன்னா சொல்றே?''

''ரோடு வேலையை கதின்னு கிடக்கிறோம் - எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது.. அதனாலே இது பத்தி ஒண்ணுமே தெரியாதும்மா..''

''தெரிஞ்சவங்க சொன்னா கேட்டுப்பியா?.. வேலை செய்யற போது குழந்தைகளைக் கவனிக்க முடியாம வயக்காட்டிலே விளையாட அனுப்பிவிடறே... அதோபார்.. ராசாத்தி காலில் சிராய்ப்பு காயம்.. குழந்தைகளுக்கு ஒரே முட்டுசளி - தலை சீவி - எத்தனை நாளாச்சு. உன்னாலே முடியாத காரியத்தை



''கதை சொல்லி, பாட்டுக் கத்துக் கொடுத்தா போதுமா அம்மா?''

''ரொம்ப அவசரப்படாதே - முழுவதும் கேளு. இந்தக் காப்பகங்களில் குழந்தைகளுக்கு நல்ல சத்தான உணவுகளைச் சாப்பிடத் தராங்க. குழந்தைகளுக்கு கொடுக்கிற சாப்பாடு.. அவர்கள வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கிறதா என்று பரிசிலனை செய்து பார்த்து.. வைத்தியர்கள் பரிந்துரை வழங்கிய பின்னர்தான் இந்தத்திட்டம் அமலாகியிருக்கு''

"அப்படி என்ன சாப்பாடு தராங்களாம்?''

''கேட்டா நாமும் குழந்தையாகிவிடக்கூடாதான்னு உனக்கு ஆசையாகிவிடும். பாசிபருப்புப் பொங்கல்-தக்காளி சாதம்-தட்டப் பயறு சாதம்-பல கீரை பொரியல்-எலுமிச்சை சாதம்-ப்பாளி, முள்ளங்கி கீரைப் பொரியல். கோதுமை உப்புமா, தண்டு கீரைப் பொரியல். இப்படின்னு பல தினுசு சுமார் இருபத்தெட்டு வகை சாப்பாடு-குழதைகளுக்கு அலுப்புத் தட்டாம மாத்தி மாத்தி கொடுக்கிறாங்க. சாப்பாடு தட்டுகளை அலம்பி வச்சுகிட்டு சுத்தபத்தமா இருக்கு நாலு குழந்தைகள் சேர்ந்து விளையாட -நல்ல பழக்கங்கள் ஏற்பட வேற இதனால் வாய்ப்பு ஏற்படுது. வருஷ முழுவதும் குழந்தைகளுக்கு இந்தச் சாப்பாடு கிடைக்கும். காலை ஒன்பது மணிக்கு காப்பகத்திலே குழந்தைகளை விட்டுட்டு -நீ சாயங்காலம் வேலையிலிருந்து வரும்போது அவங்களைக் கூட்டிக்கிட்டுப் போகலாம்.''

''அங்கே கொண்டு சேர்க்க யாரும்மா எனக்கு உதவுவாங்க?''

''நான் உதவி செய்யறேன்.. வரதம்பட்டி வடக்குத்தெருவுக்கு வந்து மூனாவது வீட்டு வாசலில் நின்றபடி..நர்ஸம்மான்னு குரல் கொடு! நான் ஓடிவந்துஉதவறேன்.''

''நாளைக்கே வரேம்மா.. என் குழந்தைகள் நல்லாபடிச்சுக்கிட்டு அதைக் கேட்டுகிட்டு வயிறார சாப்பிட்டுகிட்டு இருக்காங்க என்கிற நினைப்பே எனக்குப் பெரிய தெம்பு கொடுக்கும் -இன்னும் பத்து சுமை கல்லுகளை அலட்சியமா தூக்கிப்பேன் அம்மா..நிம்மதியா உழைப்பேன் அம்மா. இந்த உதவிக்காக உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன் அம்மா. தழுதழுத்தாள் பாஞ்சாலி.

''என்னைக் கும்பிடாதே.. இந்தத் திட்டத்துக்குக் காரணமாக இருக்கும் அந்த நல்லவரை நன்றியோட நினைச்சுக்கோ. அது போதும்..'' மகிழ்ச்சியுடன் சீதா.. மண்பாதை மீது வளைந்து நடந்து ஊர்வந்து சேர்ந்தாள்.

அவள் வீட்டு வாயிலில் எழும்பியிருந்த சிறு பந்தலில் கிடந்த பெஞ்சி மீது அவள் வரவுக்காக வடிவேலுவும் -ரத்னமும் காத்திருந்தனர். அவளைக் கண்டதும் எதிர்வீட்டுப் பாட்டி பார்வதி இருமிக் கொண்டே வந்துசேர்ந்து கொண்டாள்.

''இந்தாங்க பாட்டி உங்க மருந்து.. சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு சின்ன தேக்கரண்டியளவு மூணுவேளை.. மூணுநாள் சாப்பிடுங்க. இருமல் மருந்தும் சில்லரையும் -பில்லும் வச்சிருக்கேன் எடுத்துக்கோங்க.'' பையிலிருந்து அவைகளை எடுத்து பெஞ்சின் மீது வைத்தாள்.

''வடிவேலய்யா.. நீங்களும் வாத்யார் அம்மா ரத்னாவும் வாங்கிவரச் சொன்ன பாரதியார் கவிதைகள் ஆறு புத்தகங்கள்.. விலைப் பட்டியலும் -மீதி சில்லரையும் பத்திரமா இருக்கு எடுத்துக்கோங்க..'' அவைகளையும் எடுத்து பெஞ்சியின்மீது வைத்தாள்.

''ரொம்ப உற்சாகமாகக் காணப்படுகிறீங்களே, நர்ஸம்மா என்ன சங்கதி?'' சிரித்தார் வடிவேலு. அவர் ஓய்வடைந்த தபால்காரர். இப்போது ஊருக்கு உபகாரி.

''ஒரு நல்ல காரியத்தைச் செய்ய போறோமேன்னு நினைச்சா மகிழ்ச்சி ஏற்படாதா.'' புன்னகையுடன். பாஞ்சாலியின் குழந்தைகளைப் பற்றி விவரமாகச் சொன்னாள் சீதா.

''என்ன அதிசயம்? நாங்க ரெண்டு பேரும் இதே போல ஒரு நல்ல காரியங்களைச் செய்ய ஒப்புக்கொண்டு வந்திருக்கிறோம்.''

''அதென்ன நாம மூணுபேரும் ஒரே மாதிரியாகச் சிந்திஞ்சிருக்கோம்.'' வியந்தார் வடிவேலு.

''பலருடைய நல்லெண்ணத்தைத் தூண்டிவிடக் காரணமா அமைஞ்சிருக்கே இந்த முத்தான சத்துணவுத் திட்டம்.. மக்களிடையே எத்தனைப் பரபரப்பை ஏற்படுத்திவிட்டிருக்கு? பத்திரிகைகள் பத்தி பத்தியா எழுதியிருக்கே.. ''என்றாள் பள்ளி ஆசிரியர் வேலையினின்று ஓய்வடைந்துவிட்டு ஊருக்கு நன்மை செய்ய முன்வந்துள்ள வாத்யார் அம்மாள் ரத்னா.

''அப்படி என்னம்மா நீ இன்னிக்குச் சாதிச்சுட்டே..?'' கிழவி பார்வதி குறும்புத்தனமாக ரத்னாவைக் கேட்டாள்.

''அடுத்த தெருவிலிருக்கிற என் பெரியம்மாவைப் பார்க்க நான் காலையில் புறப்பட்டேன். வெறுங்கையோடவா போறுதுன்னுட்டு கடைத் தெரு மூலை பெட்டிக்கடையிலே ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்க நின்னேன். அப்பத்தான் கடைக்காரர் கடையைத் திறந்தார். ஒரு சின்னப் பையன் வயசு ஏழு அல்லது எட்டுக்குள்ளாரத்தான் இருக்கும். ஓடியாடி பலகைகளை அடுக்கி வச்சு-பன், பிஸ்கட் பாட்டில்களை வரிசையா வச்சு சீர்படுத்திக்கிட்டிருந்தான். பிறகு ஒரு குலை வாழைப்பழத்தை தூக்கி கடை முகப்பிலே கட்டித்தொங்கவிட்டான்.சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு -குலையிலிருந்து ஒரு பழத்தைப் பிச்சு அவசரமா உரிச்சு லபக் லபக்னு விண்டு வாயில் போட்டு முழுங்கினான். -இதைக் கடைக்காரர் பார்த்துவிட்டார். அவ்வளவுதான்'' திருட்டு நாயே! கடை திறந்து வியாபாரமாகறத்துக்குள்ளே உனக்கு முதல்போணியாடான்னுட்டு ஓங்கி அவன் கன்னத்திலே ஒரு அறை விட்டாரே பார்க்கணுமே.. அம்மான்னு அந்தப்பையன் அலறியதைக் கேட்டு என் சமனியெல்லாம் பதறிப் போச்சு.. நெஞ்சிலே யாரோ நெருப்பை அள்ளிக் கொட்டினது போல வேதனையாகிவிட்டது.

''இந்தாங்க ஐயா இந்தப் பையன் சாப்பிட்ட பழத்துக்கு நான் காசு கொடுத்துடறேன்னு கடைக்காரரை சமாதானப்படுத்தினேன். அழுதுகிட்டிருந்த பையனையப்பால் அழைச்சிக்குட்டுப் போய் கேட்டேன். ''கடைக்காரர் உத்தரவு இல்லாம அவர் கடை பழத்தை எடுத்து நீ சாப்பிட்டியே நியாயமா-அப்படி செய்யறதை திருட்டுன்னு சொல்வாங்க.. உனக்குத் தெரியாதான்னு கொஞ்சம் அதட்டினேன்.

'' ரொம்ப பசி - ராத்திரி ஆத்தா போட்ட சோறு பத்தலை ..எங்கப்பா செத்து ரெண்டு மாசமாகுது.. அம்மா வீடு கூட்டி சம்பாதிக்கிறாங்க.. எனக்குக் கீழே அஞ்சுவயசிலேயும் -மூணு வயசிலேயும் இரண்டு பெண் குழந்தைங்க இருக்காங்க. நான் வேலை செய்யாட்டி எல்லாரும் பட்டினியாக இருக்கணும். அதனாலே நாலாவது வகுப்போட நான் நின்னுக்கிட்டு வேலைக்கு வந்துட்டேன்.' என்று கூறியபடியே தேம்பி அழுதான். என் மனம் பாகாய் கரைஞ்சுபோச்சு.. தாங்க முடியாத பசியினால் அந்தக் குற்றத்தைச் செய்து விட்

டான் பையன் பாவம்.. என்ற அனுதாபத்திலே பேசினேன்.. ''இதோ பார் தம்பி. உன் பெயர் என்ன சரவணனா? சரிசரவணா! நீ நாளைக்காலை உங்கம்மாவையழைச்சுக்கிட்டு, வடக்குத் தெரு --ஏழாம் எண் வீட்டுக்கு வந்து வாத்யாரம்மான்னு குரல் கொடு நான் வெளியே ஓடிவந்து உதவறேன்..உன் தங்கச்சிகளை நம்ப ஊரில் துவங்கி இருக்கும் காப்பகத்திலே சேர்த்துடறேன்.. விதவையான உங்கம்மாவுக்கு அதிலே ஒரு ஆயா வேலை வாங்கித்தறேன்..உன்னைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்க ஏற்பாடு செய்துடறேன்... குழந்தைகள் அனைவருக்கும் நல்ல சத்துணவு வயிறு நிறைய சாப்பிட கிடைக்கும். அம்மாவுக்கும் வேலையும் முன்னுக்கு வரமுடியும்.. என்ன சொல்றே.. என்றேன். நம்பமாட்டிங்க அந்தப் பையன் திடீர்னு என் காலில் விழுந்து கும்பிட்டான். எழுந்திரு தம்பி..இந்தக் கும்பிடுக்கு உரியவர் உங்களையெல்லாம் பத்தி நினைக்கிற ஒரு உத்தமர்னு சொன்னேன். அவன் முகத்திலே படர்ந்த மகிழ்ச்சி என்னால் விவரிக்கவே முடியாது. கட்டாயம் வரேன் அம்மா. என்று ஒப்புக்கொண்டிருக்கிறான் ஒரு குடும்பத்திற்கு இந்தத் திட்டத்தின் மூலம் உதவப்போகிறோமே என்கிற மகிழ்ச்சி எனக்கு.

''ஏய்யா வேலுசாமி! நீங்க என்ன செய்தீங்களாம்! இத்தனை ஆனந்தப் பட்டுக்கிறீங்க.. இருமலுக்கிடையே அந்தப் பொல்லாத கிழவி பார்வதி அவரை மடக்கினாள்.

''நாங்க மூணுபேருமே இன்னிக்கு நல்லவர்களான உங்க முகத்திலே முழிச்சிருக்கோம் போலிருக்கு. அதனால நல்ல காரியங்களைச் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். .நான் மளிகைச் சாமான் வாங்க.. நம்ப கடைத்தெருவுக்கு சித்த முன்னே போயிருந்தேன். வேண்டியதை வாங்கி முடிச்சுகிட்டு வீட்டுக்கு கிளம்ப திரும்பினேன் ஒரு லாரி. வந்து கடை வாசலில் நின்னுச்சு. திருச்சியிலிருந்து அரிசி-பருப்பு-இதுகளை கடைக்காரர் தருவிச்சிருக்கார் போலிருக்கு. கடை ஆட்கள் ஓடிச்சென்று லாரியிலிருந்த மூட்டைகளை இறக்கி ஆளுக்கு ஒண்ணா முதுகிலே தூக்கிட்டு உள்ளே கொண்டுவைக்க தொடங்கினாங்க.. பனிரெண்டு வயசு இருக்கும் ஒரு பையன்-கையும் காலும் குச்சியாட்டம்மா மார்பு எலும்பு எண்ணிக்கிறாப்பல மெலிசா இருந்தான். அவன் முதுகிலே ஒரு பெரிய அரிசி மூட்டையைத் தூக்கி ஒரு ஆள் வச்சான்..'டே! கணேசா உள்ளே



கொண்டு சீக்கிரம் வச்சூட்டுவா-மசமசன்னு நிக்காதே கூப்பாடு போட்டார் அந்த ஆள். பையனாலே அந்தச் சுமையைத் தாங்க முடியலே..அப்படியே முதுகு ஒடிஞ்சிடும்போல உடம்பை வளைச்சுக்கிட்டு மூச்சு வாங்க அவன் அதைத் தூக்கிட்டு போனதைப் பார்த்த எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்திச்சு.. ஆத்திரமாகவும் வந்தது. மூட்டையை உள்ளார வச்சூட்டு அந்தப்பையன் வெளியே வந்தப்போ அவனை கைதட்டிக் கூப்பிட்டேன்.

''தம்பி கணேசா! பள்ளிக்கூடத்திலே படிக்கிற வயசிலே ஏன் இந்த முரட்டுவேலைக்கு வந்திருக்கேன்னு?' கவலையோட கேட்டேன்.

''அப்பா, அம்மா ரெண்டு பேரும் செத்துட்டாங்க -சித்தப்பாகிட்டே வளர்றேன்.., தண்டச்சோறு திங்காதே-ரெண்டு காசு சம்பாதின்னு அவங்க எப்ன் படிப்பை நிறுத்தி இங்கே அனுப்பிச்சாங்க.. எட்டாவது வரை படிச்சிருக்கேன்'' தேம்பினான் பையன்.

''உங்க வீட்டு முகவரியைச் சொல்லு-நான் வடக்குத் தெரு பதினைந்தாவது எண்ணில் இருக்கேன். நானே நாளைக்கு உங்க வீட்டுக்கு வந்து உன் சித்தப்பாவைப் பார்த்து பேசி உன்னை மறுபடி பள்ளிக் கூடத்திலே சேர்க்க ஏற்பாடு பண்றேன். நீ படிச்சு முடிக்கிறவரை-பதினாலு வயது ஆகும்வரை உனக்கு அங்கே வருஷம் பூராவும் சத்தான உணவு தினமும் வயிறு நிறையப் போடுவாங்க.. படிப்பும் கிடைக்கும் - பசியும் ஆறும்.. பிளஸ் டூ முடிச்சிட்டு தொழில் கல்வி கத்துக்கிட்டு நல்லா முன்னுக்கு வருவே..உங்க சித்தப்பா ஒத்துக்காட்டா பஞ்சாயத்தைக் கூட்டி அவரை ஒப்புக்கவைக்க எனக்கு நாட்டாண்மைக்காரரை நல்லாவேதெரியும். பயப்படாதே தம்பி-நான் கட்டாயம் உன் வீட்டுக்கு வரேன்னு சொல்லிவிட்டு வந்திருக்கேன். அந்த மகிழ்ச்சி தான் என் குரலில் உற்சாகமாக ஒலிக்கிறது'' வேலுசாமி சிரித்தார்.

''பரவாயில்லை! மூணுபேரும் நல்ல வேலை செய்திருக்கீங்க... இந்தத் திட்டத்தைப் பத்தி வாய் ஓயாது சிலநாளா பலர் பேசறதைக் கேட்கிறேன். ஆனால் ஒரு சந்தேகம்...''

''என்ன சந்தேகம் பாட்டி..?''

''தேன் எடுக்கறவன் புறங்கையை நக்காமே இருப்பானா? இந்தத் திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கப்பட்ட இடங்களில் உள்ளவங்க சுத்தமான மனதோட நடந்துப்பாங்கன்னு நம்புறீங்களா..?''

''ஒரு நல்லகாரியத்தை எடுத்துச் சொன்னதுவே முட்டுக்கட்டை போடுறீங்க.. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறவர்.. இதை எப்படிப் பாதுகாக்கிறது எங்கிறதைப் பத்தியும் தீவிரமாகச் சிந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கார். சந்

தேகம் என்கிற பேயை முதலில் உங்க மனதிலிருந்து எடுத்து எறி யுங்கோ பாட்டி.. நீங்க இப்போ உங்க வீட்டுக்குப் போறீங்க.- உங்க மருமகள் ஒரு குவளை மோர் தாகத்துக்கு உங்களுக்கு எடுத்து கொடுக்கிறாங்க -அந்த மோரில் விஷம் கலந்திருக்கா மருமகள், உங்களைக் கொல்ல முயற்சி பண்றாளான்னா நீங்க நினைச்சு குடிக்கிறீங்க? மகராசி தந்தாள்-தாகம் தீரும் என்கிற நம்பிக்கையிலே குடிக்கிறீங்க- நாம எல்லாரும் ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருக்கிற நம்பிக்கையால் தான் உலகத்திலே வாழ முடிகிறது. .இந்தத் திட்டத்தைத் தீட்டியவர்களுக்கு..மக்கள் மீது அபார நம்பிக்கை இருக்கு. அந்த மாபெரும் சக்தியே ..இந்தத் திட்டத்துக்கு ஒரு பெருத்த பாதுகாப்பு-புரிஞ்சுதா..''

''ஆமாம் தம்பி! குழந்தைகள் சோற்றிலே நாம கைவைக்க- அதைப்போல பாவம் வேறே இல்லை..எந்தக் கோயிலுக்குப் போனாலும் அதைப் பிறகு உதற முடியாது.

''நம்ப ஊர் விழாவிலே தேர் வரும்போது புண்ணியம்னுபோய் சித்த வடத்தைப் பிடிச்சு முடிஞ்ச மட்டும் இழுத்துட்டு வருவீர் களே-அதுபோல.. இந்தத் திட்டம் என்கிற தேரை இழுக்க எங்களோட சேர்ந்து நீங்களும் வடம் பிடிக்கிறீங்களா பாட்டி?''

''நான் என்ன செய்யமுடியும் வேலுசாமி?''

''புகையிலையை வாங்கி வெத்தலையை மென்னு கண்ட இடத்திலே எச்சில் துப்பறதை நிறுத்தி திட்டு புகையிலை வாங்கற காசை ஒரு உண்டியிலே போட்டுசேர்த்து வையுங்கோ. பத்து பதினைஞ்சு ரூபாயா சேர்ந்த பிறகு அதை வாத்யார் அம்மாகிட்டே கொடுத்து, இந்தத் திட்டத்துக் குன்னு ஆரம்பிச்சிருக்கிற நிதிக்கு உங்கள் நன்கொடையாக அனுப்பச் சொல்லுங்க. புண்ணியத்துக்குப் புண்ணியம் உங்களை வந்து சேரும்-புகையிலை போடா நிறுத்தினால் வாயில் புற்றுநோய் வராது.. உங்களைக் காத்துக்க முடியும்.''

''சரி தம்பி. இந்த வெருவே கூடி இந்தத் திட்டத்துக்கு ஆவுக் கேதாச்சும் உதவராப்பல நான் வீடு வீடா போய் பேசறேன் அப்பா. பாரதி விழாகொண்டாடப் போவதாகச் சொன்னியே அப்பக்கூட இதைப் பத்தி மக்களிடையே பேசலாமே?''.

''ஆமாம் பாட்டி அடுத்த வாரம். நம்ப ஊரில் பள்ளிக் கூடத்திலே பாரதி நூற்றாண்டு விழா கொண்டாட ஏற்பாடு- பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு கொடுக்கத்தான் பாரதி கவிதைகள் என்கிறபுத்தகங்களை நர்ஸம்மா வாங்கிட்டு வந்திருக் காங்க'' என்று கூறியபடி வடிவேலு ஒரு புத்தகத்தை எடுத்துத் திறந்தார். பிரமிப்புடன் மற்றவர்களைப் பார்த்தார்.''என்ன அதிசயம். இந்தத் திட்டத்திற்காகவே இந்தப் பாடலை எழுதி வைத்திருக்கிறாரே! வாசிக்கிறேன் கேளுங்கள்.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் !
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !
எதுவுமற்றவர் வாய்ச் சொல் லருளீர் !
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத்தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணிபூசைக்குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யாலும்
இப்பெரும்தொழில் நாட்டுவம் வாரீர்.!''

பாட்டி, பணம் இருக்கிறவங்க உணவுக்கூடம் கட்ட முன்வாருங்கள். வசதி குறைவானவங்க கொஞ்சம் பணமாவது இந்தத் திட்டத்துக்கு உதவுங்க.. உடம்பிலே பலம் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தைச் செவ்வனே செயல்பட உழைப்பைத் தாருங்கள்- உங்களைப் போல வயசானவங்க வாய்ச் சொல்லால் ..நாலு திசைகளிலும் இதைப் பற்றிப் பேசிப் பரப்புங்கள்என்ற பொருள் பட.. எப்போவோ..நமக்காக பாடி வச்சிருக்கார் பாரதி..இது அதிசயமல்லவா .? கவிஞர்கள் — கலைஞர்கள் — ஓவியர்கள் — புலவர்கள் எல்லோரும் உண்மை உணர்வுடன் செயல் பட்டால் தீர்க்கதரிசிகளாகி விடுகின்றனர். .புரியுதா பாட்டி!''

''புரியுது..இந்த முத்தான திட்டத்தை நடத்திக் கொடுக்க முன் வந்த மகராசன் நல்லா இருக்க ணும்னு நான் மனம் நிறைஞ்சி வாழ்த்தறேன். வயதில் மிக்க தாய் நான் நல்லா வாழ்த்தறேன். என்றபடி பார்வதி பாட்டி கை கூப்பி வணங்கி... ஆண்டவன் அருளைவேண்டி..வாழ்த்தினாள்!

## தமிழ்நாட்டில் முதல் மின் உற்பத்தி

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களில் அமைக்கப்பட்ட சிறு மின் உற்பத்தி அணிகள், காட்டேரியில் அமைக்கப்பட்ட சிறு புனல் மின் உற்பத்தி அணி ஆகியவற்றின் வாயிலாகத் தமிழ்நாட்டில் மின் வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது எனலாம்.

சென்னை மின் வழங்கு நிறுவனமே மின் உற்பத்திக்கெனவும் மின் விநியோகத்திற்கெனவும் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட முதல் அரசுத்துறை அமைப்பாகும். இரண்டாவது உதகை நகராட்சியாகும். இதைத் தொடர்ந்து 1910-ஆம் ஆண்டு மின் விநியோகச் சட்டத்தின்கீழ் சில சிறிய கம்பெனிகளுக்கும் நகராட்சிகளுக்கும் மின் விநியோக உரிமம் (முடிவில்லாத காலம், அளவுக்கு வளர்ந்து வந்துள்ளது) வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மாநிலத்தில் புனல் மின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கான முயற்சிகள் 1924-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. 1925-ஆம் ஆண்டில் மின் வளர்ச்சிக்கான கொள்கைகள் அறிவிக்கப்பட்டன. முதல் புனல் மின் உற்பத்தித் திட்டமான பைகாரா திட்டத்தின் பணிகள் 1927-ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட போது, மின் துறைக்கெனத் தனித் துறையும் உருவாக்கப்பட்டது. இதுவே மின் துறையின் திட்டமிட்ட வளர்ச்சிக்கான கால்கோளாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23




தமிழரசு
16—8—1982